பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தரமானதே சிறந்தது என்றால்
சொலிட்
பம்பையே வாங்குங்கள்

# உதயன்

விலை
ரூ 2. 50


When, only
The best is
Good Enough
Buy
Solide Pumps

ஒளி: 4 விபவ ஞூ தை மீ 24 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 28 (06-02-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 63

# கூட்டத்தில் குண்டு வீச்சு, சூடு!

# சிறிமா மயிரிழையில் தப்பினார்!!

## தேர்தல் மேடையில் பயங்கரம்; 2 பேர் பலி, 50 பேர் காயம்

கொழும்பு. பெப்ரவரி 6

ஹிங்குராக்கொடையில் நேற்று நடைபெற்ற தேர்தல் கூட்டம் ஒன்றில் சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

தேர்தல் மேடையில் நடந்த மயிர்க்கூச்செறியும் குண்டுவீச்சு, பயங்கரத் துப்பாக்கிச் சண்டைகளின் மத்தியிலும் திருமதி பண்டாரநாயக்கா எவ்வித ஆபத்தும் இல்லாமல் காப்பாற்றப்பட்டார்.

சம்பவத்தில் இருவர் கொலையுண்டனர் ஐம்பதுக்கும் அதிகமானோர் காயமுற்றனர். அவர்களில் அரைவாசிப் பேர் ஆபத்தான நிலையில் உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

கொலை முயற்சிச் சம்பவம்பற்றித் தெரியவருவதாவது:-

பொலன்னறுவ மாவட்டத்தில் ஹிங்குராக்கொடையிலும் பொலன்னறுவையிலும் இரண்டு கூட்டங்களில் திருமதி பண்டாரநாயக்கா பேச இருந்தார்.

ஹிங்குராக்கொடை கூட்டத்தில் மேடையில் அமர்ந்திருந்த திருமதி பண்டாரநாயக்கா பேச எழும்புவதற்குச் சில விநாடிகள் முன்பதாக இனந்தெரியாத நபர்கள் மேடையை நோக்கி குண்டுகளை எறிந்தனர்.

இரண்டு குண்டுகள் மேடையில் விழுந்தன உடனே மெய்ப்பாதுகாவலர்கள் அவற்றைக் கீழே தட்டிவிட்டனர் திருமதி பண்டாரநாயக்காவையும் அலாக்காகத் தூக்கிக் கீழே இறக்கிவிட்டனர்.

கிரனேட்டுகளை எறிந்த பின்னர் இனந்தெரியாத நபர்கள் மேடையை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்

திருமதி பண்டாரநாயக்காவின் மெய்ப்பாதுகாவலர்களும் திருப்பிச் சுட்டனர். கடும் துப்பாக்கிச் சண்டை 20 நிமிடங்கள் வரை நீடித்தது.

இச் சம்பவத்தில் இரண்டு பேர் கொலையுண்டனர். 50க்கும் அதிகமானோர் காயம்

(6ஆம் பக்கம் பார்க்க)

### சதி என்கிறார் சிறிமா

கொழும்பு பெப் 6

என்னை படுகொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டம் இது.

சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா முன்கண்டவாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஹிங்குராக்கொடை தாக்குதலின் பின்னர் அவர் தெரிவித்த கருத்து இது. (ஒ எ)

### மேலும் எண்மர் சுட்டுக்கொலை

கொழும்பு, பெப் 6

தென் பகுதியில் மேலும் எண்மர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்

தோட்டத்துரை ஒருவரும் அவரின் புதல்வரும் உயிரிழந்தவர்களில் அடங்குவர்

இன்னொரு இடத்தில் பொதுக்கூட்டம் ஒன்றை நோக்கி இனந்தெரியாதோர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஆறு பேர் மாண்டனர்.

[ஒ-எ]

### ‘டை’க்கு வந்த மவுசு!

கொழும்பு பெப் 6

கொழும்புச் சந்தையில் கழுத்து ‘டை’களுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பல வருடங்களாக சில கடைகளில் கவனிப்பாரற்றுக் கிடந்த ‘டை’கள் படபட என்று விற்றுத் தீர்க்கப்பட்டனவாம்:

‘டை’ கட்டி வேலைக்குச் சமுகமளிக்க வேண்டும் என்ற அரச உத்தரவே இந்நிலை ஏற்பட்டதற்குக் காரணம் என்று கூறத் தேவையில்லை. (உ-எ)

### வடக்கு, கிழக்கில் பாதிப்புற்றோரின்

## வங்கிக் கடனுக்குச் சலுகை!

யாழ்ப்பாணம், பெப் 6

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அரச வங்கிகளில் கடன் பெற்றவர்கள் — அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டிருந்தால் — அவர்களுக்குக் குறிப்பிட்ட சில சலுகைகளை வழங்கும்படி சம்பந்தப்பட்ட வங்கிகளின் தலைமை அலுவலகங்கள் அறிவித்திருக்கின்றன.

கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான கால எல்லையை நீடிக்குமாறும் கடனுக்கான வட்டி விகிதத்தை குறிப்பிட்ட அளவு குறைக்குமாறும் வங்கிகளுக்குப் பணிப்புரை வழங்கப்பட்டிருக்கிறது

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்களினால் உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமே இந்தச் சலுகைகளை வழங்குமாறும் உத்தரவிடப்பட்டிருக்கிறது

ஏனையோரின் கடன்களை உரிய காலத்தில் உரிய வட்டி விகிதத்தில் அறவிடுமாறும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அரச வங்கிகளிலிருந்து வீடமைப்புக் கடன்கள் மற்றும் வர்த்தகத்துறை சம்பந்தமான கடன்களைப் பெற்றவர்கள் — அசம்பாவிதங்களினால் பாதிக்கப்பட்டதனால் அவற்றை மீளச் செலுத்தமுடியாது இருப்பின் — அவர்கள் மேற்படி பணிப்புரையின் கீழ் ஓரளவு பயன்பெற முடியும். (உ-ஐ)

## போதைவஸ்து கடத்திய தமிழருக்கு மரணதண்டனை

### நீர்கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, பெப் 6

ஹெரோயின் போதைவஸ்து கடத்த முயற்சித்த சண்முகராஜா என்ற தமிழருக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி வீரசேகரா மரணதண்டனை விதித்தார்.

சென்னையில் இருந்து இந்தியன் எயர்லைன்ஸ் விமானம் மூலம் எதிரி கட்டுநாயக்கா விமான நிலையம் வந்திறங்கிய போது சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் சோதனையிடப்பட்டார். அப்போது அவரின் சூட்கேஸின் அடிப்பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த கள்ள அறைக்குள் 3 பொலீத்தீன் பக்கட்டுக்களில் 619 கிராம் சுத்தமான ஹெரோயின் பதுக்கி வைத்திருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது.

குற்றவாளியாகக் காணப்பட்ட சண்முகராஜாவுக்கு வயது 33. (உ-எ)

## ஹிங்குராக்கொடையில் சர்வதேச விமானத்தளம்

கொழும்பு பெப் 6

ஹிங்குராக்கொடையில் இன்னொரு சர்வதேச விமான நிலையத்தைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

30 கோடி அமெரிக்க டாலர் செலவில் ஜப்பானிய உதவியுடன் இந்த விமான நிலையம் நிர்மாணிக்கப்படும்.

திட்டத்தைச் செயற்படுத்த ஜப்பான் இணங்கியிருக்கிறது. (உ-எ)

## கூட்டுறவு அமைப்பை பரவலாக்குவது குறித்து இன்று கொழும்பில் மாநாடு

யாழ்ப்பாணம். பெப் 6

வடக்கு-கிழக்கு மாகாணசபைகளின் கீழ் கூட்டுறவு அமைப்பின் அதிகாரப்பரவலாக்கல் பற்றிய மாநாடு ஒன்று இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது

தேசிய கூட்டுறவுப் பேரவைத் தலைவர் திரு. எம். ஆர். வி. தாளவத்த தலைமையில் மாநாடு நடைபெறும்.

மாநாட்டில் வடக்கு கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களினதும் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

தேசிய கூட்டுறவுப் பேரவையில் செறிந்துள்ள அதிகாரத்தை மாவட்ட ரீதியில் எவ்வாறு பரவலாக்குவது என்பது குறித்தும் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்துமே மாநாட்டில் ஆராயப்படவுள்ளன. (ஒ-எ)

### சு. க.வினர் 3 பேர் கொலை

கொழும்பு, பெப் 9

பொலன்னறுவ மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை சுதந்திரக் கட்சி ஆதரவாளர்கள் மூன்று பேரை இனந்தெரியாதவர்கள் சுட்டுக்கொன்றனர். (ஒ-எ)

### சுபநேரம்

06-02-1989
தை-24
திங்கட்கிழமை
சுபநேரம்:
12.35 முதல் 2.05 வரை
ராகுகாலம்:
08.05முதல் 09.35 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### முச்சந்தி முரளி



எலக்ஷன் முடிய பொடிபுத்தா வின்ரை சங்கத்திற்கு நிறைய ஆக்கள் சேருவினம் கண்டியளோ.........!

### மார்ச்சில் பட்ஜெட்

புதிய நாடாளுமன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட மறு தினம் புதிய வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்.

இப்படி அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

வருகிற மார்ச் 9 ஆம் திகதி புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டம் நடைபெறும்.

### நவீனசந்தை, கன்னுதிட்டி

## வங்கிகளில் பணப்புழக்கம் இடைநிறுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், பெப் 6

மக்கள் வங்கியின் யாழ். நவீன சந்தைக் கிளை, கன்னுதிட்டிக் கிளை ஆகியவற்றில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட பணக்கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கிளைகளில் மீண்டும் எப்போது பணக்கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்பது பற்றி எதிர்வரும் 15 ஆம் திகதிக்குப் பின்னர் அறிவிக்கப்படும் என மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய தலைமை அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-ஐ)

### காலியில் மூவர் பலி

கொழும்பு, பெப் 6

தென் மாகாணத்தில் காலியில் ‘பிரா’ இயக்கத்தினர் மூன்று பேரை சுட்டுக் கொன்றனர் என்று ஏஜன்சிச் செய்தி ஒன்று தெரிவித்தது (ஒ எ)

### ஜானகி அணி கூட்டம்

சென்னை, பெப் 6

ஜானகி அம்மாள் தலைமையிலான அ. தி. மு. க வின் தலைமைப் பொதுக்குழுக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று பொதுச் செயலாளர் திரு ராகவானந்தம் அறிவித்திருக்கிறார். (உ-எ)

## ஈழத் தமிழர் விவகாரம்; ராஜீவுடன் கலைஞர் பேசுவார்

### புதன், வியாழனில் புதுடில்லியில் சந்திப்பு

தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி எதிர்வரும் புதன்கிழமையும் வியாழக்கிழமையும் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச்சுக்கள் நடத்துவார்.

இத் தகவலைத் திரு. கருணாநிதியே நேற்றுச் செய்தியாளரிடம் வெளியிட்டார்.

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு முடிவு காணுவது குறித்து பிரதமர் காந்தியுடன் புதுடில்லியில் வைத்துப் பேச்சுக்கள் நடத்தப் போவதாகவும் திரு. கருணாநிதி மேலும் சொன்னார்.

தமிழ்நாட்டுச் சட்டசபைத் தேர்தலில் அமோக வெற்றிபெற்று ஆட்சி அமைத்த பின்னர் திரு. கருணாநிதி புதுடில்லி செல்வது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது

இம்மாதம் 11 ஆம் திகதி தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத்தைத் தொடக்கி வைத்து நிகழ்த்தப்படவுள்ள ஆளுநர் உரையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றியும் தி. மு. க. அரசு தனது எண்ணத்தைத் தெரிவிக்கலாம் என்றும்-

அதற்கு முன்னர் பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து நிலைமையை அறிந்து கொள்ளவும் தனது நிலைப்பாட்டை எடுத்துச் சொல்லவும் திரு கருணாநிதி தனது புதுடில்லி விஜயத்தைப் பயன்படுத்துவார் என்றும் சென்னை அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையில் மாநிலங்களின் முதலமைச்சர்கள் மாநாடு 8, 9 ஆம் திகதிகளில் புதுடில்லியில் நடைபெறுகிறது

அதில் கலந்து கொள்ளவே முதலமைச்சர் கருணாநிதி செல்கிறார்.

அப்போதே பிரதமர் ராஜீவ் காந்தியையும் அவர் சந்திப்பார்.

### விடுதலைப்புலிகள்-இந்திய அமைதிப்படை

## சண்டையை நிறுத்துமாறு கருணாநிதி வேண்டுகோள்

கொழும்பு, பெப் 6

தற்போது ஈழத்தில் நடைபெற்றுவரும் சண்டையை நிறுத்தும்படி இந்திய அமைதிப்படைக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி நேற்று வேண்டுகோள் விடுத்தார்.

பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனத்தின் செய்தி அறிக்கை ஒன்று இத்தகவலைத் தெரிவித்தது.

நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டிலேயே அவர் இத்தகவலைத் தெரிவித்ததாக அச்செய்தி மேலும் தெரிவித்தது.

புதுடில்லியில் எதிர்வரும் புதன், வியாழக்கிழமைகளில் பிரதமர் ராஜீவ் காந்தியை தான் சந்தித்துப் பேசும்போது சண்டையை நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி அவரைக் கோரவிருப்பதாகவும் கருணாநிதி செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

-இப்படி பி. ரி. ஐ. செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாக இலங்கை வானொலி நேற்றிரவு அறிவித்தது. [உ-எ]

### முன்னாள் எம். பிக்களுக்கு சங்கம்

கொழும்பு, பெப் 6

முன்னாள் எம். பிக்களின் சங்கம் ஒன்றை நிறுவ முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்க முன்னாள் எம். பிக்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியிருக்கிறார் ‘பொடிபுத்தா’ என்றழைக்கப்படும் நிக்கவரெட்டிய தொகுதி முன்னாள் எம். பி. திரு. முதியான்ஸே தென்னக்கோன்.

சங்கத்திற்கான யாப்பை திரு தென்னக்கோன் ஏற்கனவே தயாரித்து விட்டார்.

### புங்குடுதீவில் கூட்டம் இல்லை

யாழ்ப்பாணம், பெப் 6

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று காலை 9 மணிக்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா உரை நிகழ்த்தவுள்ளார்.

முன்னைய திட்டத்துக்கு மாறாக- புங்குடுதீவில் கூட்டம்- நடைபெறமாட்டாது எனத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை யாழ்ப்பாணத்தில் நடை

[6-ஆம் பக்கம் பார்க்க]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ✻சின்னஞ் சிறு விளம்பரம்✻

### விற்பனைக்கு

எமது உற்பத்திப் பொருள்களில் ஒன்றான உறுதியான, உத்தரவாதமான 1989ஆம் ஆண்டு முத்திரையிடப்பட்ட இலோப் படிகள் (Metric dead Weights] மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். சாமுவேல் சன்ஸ் அன்கோ லிமிட். யாழ்ப்பாணம். (C/1447)

நல்ல பாவிப்பிலுள்ள English ஒற்றைக் கதவு பெரிய இரும்புப் பெட்டி உடன் விற்பனைக்கு உண்டு பாவ்லு எலக்ரோ பிளேற்றேர்ஸ், No. 7 கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம். [9327]

### கோழிக்குஞ்சு விநியோகம்
### Uplands Farm

சருடபு (புள்ளி) சேவல் குஞ்சு ஒவ்வொரு வாரமும் குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும் முன்கூட்டியே பதிவு செய்க. இல. 9, சந்தையா லேன், சுன்னாகம் (புகையிரதநிலையத்திற்கு அண்மையில்) (9450

நாற்பத்தைந்து நாட்களில் வளர்ச்சியடையும் (Dekalb) பிறவுன் சேவல்குஞ்சு (8-2-89) புதன்கிழமை விநியோகிக்கப்படும். விலை ரூ 4/50 முன்கூட்டியே பதிவுசெய்க. இல. 9, சந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்திற்கு அண்மையில்) [9449]

### O/L ENGLISH

பழைய பாடத்திட்ட மீட்டல் வகுப்புகள் ஆரம்பம் 6-2-89 மாலை 5 மணி — 6 மணிவரை கிழமை நாட்களில் 15 வகுப்புகள் தொடர்ச்சியாக நடைபெறும். S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (9431)

### Spoken English

தூர இடங்களிலிருந்து வருபவர்கள் வசதிக்காக புதிய பிரிவு ஆரம்பம்:- 11-02-89 சனி/ஞாயிறு நாட்களில் நேரம் காலை 10/30 - 12/30 S B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். [9475]

### TOEFL

புதியபிரிவு ஆரம்பம் 11-02-89 சனி ஞாயிறு நாட்களில். நேரம் காலை 8-30 – 10-00 மணி வரை. S. B Iyar, No. 12, வைமன் வீதி, நல்லூர். [9473]

### ADVANCED ENGLISH

புதிய பிரிவு ஆரம்பம்: 11-02-89 சனி, ஞாயிறு நாட்களில் நேரம் காலை 6/30— 8/00 மணிவரை S.B.Iyar No 12, வைமன் வீதி, நல்லூர். (9474)

### சேவை

Type writers- தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சாரநிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [Samy & Co - Shabra அருகாமையில்] [C/1362]

### WANTED

Wanted Young and Dynamic person having Experience in store keeping (engineering materials) book keeping and Typing walk in for an interview on 9-2 89 Euroville Engineers and Constructors: (Pvt) Ltd 449, Stanley Rd Jaffna. (9333)

### சித்திரவகுப்பு

வட இலங்கை நுண்கலை மன்றம் யாழ். கல்விப் பணிப்பாளர் தலைமையில் வெளியிட்டுள்ள 1989ஆம் ஆண்டு பரீட்சைக்கு தோற்ற விரும்புவோர் நெல்லியடியில் ஆரம்பிக்கவுள்ள வகுப்பிற்கு 10-2-89 இற்கு முன் விண்ணப்பிக்கவும் அல்லது நேரில் வரவும். சி. தங்கராசா, சித்திர ஆசிரியர், நெல்லியடி, கரவெட்டி. (9334)

### வாடகைக்கு

அதிகார் வீ , கோப்பாய் தற்கில் உள்ள விசாலமான மோட்டர் போட்ட தண்ணீர் வசதியும், மின்சாரமும் உள்ள வீடு 'யமுனை' வாடகைக்கு விட உள்ளது. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ந. செல்வரத்தினம் 'நித்தியா' நாச்சிமார் கோயிலடி பழம்ரோட்டு, கோப்பாய் தெற்கு. [9329]

### தவறிவிட்டது

462170319V என்னும் இலக்கமுடைய (கோ. கந்தனின்] அடையாள அட்டை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மாசி 1ஆம் திகதி பகல் 1மணிக்குக் காணாமல் போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (9332]

### சமூகக்கல்வி

வெளிவந்து விட்டது! விற்பனையாகின்றது!! சமூகக்கல்வி ஆண்டு 11, ஆண்டு 10, (புதிய பாடத்திட்டம்) ஆக்கியோன் ந. தர்மபாலன். சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (9306)

### NEW CITY TRADERS

சகல விதமான சுவர் மணிக்கூடுகள், கைக் கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், Film roll வகைகள் சூட்கேஸ், Travelling bags School bags, Wheel bags, எவர்சில்வர் பொருள்கள், Glass மற்றும் அன்பளிப்புப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள, New City Traders 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் (C/1536)

## விழிப்புலன் அற்றோர் 67 ஆயிரம் பேர்

இலங்கையில் உள்ள விழிப்புலன் அற்றோரின் எண்ணிக்கை 67 ஆயிரத்துக்கு அதிகம் என்று அறிவிக்கப்பட்டது.

வைத்திய சேவைகள் பிரதி இயக்குநர் டாக்டர் ரெஜி பெரேரா இத்தகவலை வெளியிட்டார். (இ-எ)

விற்பனையாகின்றது:
ஆண்டு 2, ஆண்டு 3,
கணிதப் பயிற்சி
செயல் நூல்
(புதிய பாடத்திட்டத்திற்கானது)
வெளியீடு:
ஆ. வி. அச்சகம், யாழ்ப்பாணம்
விற்பனை: ஞானசூரிய புத்தகக் கம்பனி
(C/1441)

தெல்லிப்பழை

# புற்றுநோய் சிகிச்சை நிலையம் இயங்க வைக்க முயற்சி

யாழ்ப்பாணம், பெப். 6

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையத்தை இயங்க வைப்பதற்குச் சில தடைகள் ஏற்பட்டுள்ளன, சமீப காலத்தில் நடைபெற்ற சில சம்பவங்களைச் சாட்டாக வைத்து அரசாங்கம் புற்றுநோய் ஆஸ்பத்திரியை இங்கு ஆரம்பிப்பதற்குத் தயங்குகிறது.

ஷெல் தாக்கம் ஏற்பட்டு இயந்திர சாதனங்கள் பழுதடையுமானால் அதனால் ஏற்படும் நஷ்டத்தோடு சூழலும் பாதிக்கப்படும் என்று அரசாங்கம் கூறுகிறது. இது நியாயமான காரணமாக இருப்பினும் இவ்விடயத்தில் சம்பந்தப்பட்டவர்களோடு தொடர்புகொண்டு அப்படி நிகழாத நிலையை ஏற்படுத்திச் செயல்பட்டு வருகிறோம்.

வடமாகாண புற்றுநோய் சங்கத்தலைவர் திரு. ஜெகநாதன் இச்சங்கத்தின் கூட்டத்தில் உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது. "அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் குடும்பத்தினர் தந்துதவிய 12 லட்சம் ரூபாவைக் கொண்டு அமைக்கப்பட்ட இச்சிகிச்சை நிலையத்தைத் திறப்பதற்கு எம்மாலான முயற்சிகளைச் செய்து வருகிறோம் இந்நிலையத்தில் சேவை ஆற்றுவதற்காக டாக்டர் ஒருவர் நியமிக்கப்பட்டு அவர் பயிற்சி பெறச் சென்றுள்ளார்.

அவரின் பயிற்சியும் முடிவடையும் தறுவாயில் உள்ளது

ஆகவே அவரின்சேவையைப் பெற்று இந் நிலயத்தை எப்படியும் இயங்க வைக்கவேண்டும்.

இப்படி அவர் கூறினார். (ச)

## 4ஆம் வருட நினைவஞ்சலி

மண்ணில் மலர்வு:-
16-07-1935

✶ ✶

விண்ணில் நுழைவு:-
06-02-1985

✶ ✶

### டானியல் இம்மனுவேல்

(நோர்வி என்ரபிறைசஸ்)

இதுதான் விதியென்று தீர நினைத்தாலும் இதயம் நோகின்றதே எம் அருமைச் சோதரமே! பண்பான மனைவி, பாங்கான மக்கள், பற்று மிகுந்த சோதரர் ஆசைத்தங்கைகள், கதறித் துடித்திட உற்றார், கலங்கிட பறித்து எடுத்தாலும் இறைவன் பாதமலர் உன் ஆத்ம சாந்திக்கு இதமாக வேண்டுவோம் உமது உறவுகள்.

இவரின் ஆத்ம சாந்திக்காக புனித மரியாள் பேராலயத்தில் 06-02-1989 காலை 6.15 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அவரின் ஆன்ம சாந்திக்கு மன்றாடும்படி அன்புடன் வேண்டுகின்றோம்

மனைவி, மக்கள், சகோதரர்.

7, ஓடக்கரை ரோட்,
யாழ்ப்பாணம். [C/1434]

## முதலாம் ஆண்டுப் பிரார்த்தனை

அதிபர்

### செல்லத்துரை சௌந்தரநாயகி

அவர்கள்

தூலமுகிழ்ப்பு: 10 - 07 - 1902
தூல அவிழ்ப்பு: 18 - 01 - 1988

அன்னையாய் அன்னம் பாலித்து
அமுது செய்தவளே!
நான்கு தலைமுறைகளின்
நாயகியாய் நின்றவளே!
மருமக்களைப் பேணி மகராசி ஆனவளே!
உத்தராயணத்தில் உலகை விட்டுப்
போனாலும் எங்கள்
உள்ளங்களில் குலதெய்வமாய்
குடி கொண்டீர்கள்
அபிராமிப்பட்டர் தினத்தில்
அமலனடியடைந்தீர்கள்!
பன்னிரு ஆண்டிற்கு ஒரு முறை
வரும் தை அமாவாசையான இன்று
தென்புலம் நோக்கிய ஓராண்டைப்
பூர்த்தி செய்தீர்கள்.
எங்கள் வாழ்வு உங்கள்
கையில் இருந்தது போல
எங்கள் வளமும் உங்கள்
உயிரிலிருந்து பெருகட்டும்.

தங்கள் ஆன்மா சிவப்பேறெய்தி
மகிழப் பிரார்த்திக்கின்றோம்.

மருமக்கள், மக்கள், பேரர், பீட்டர்
"பசுபதி வாசம்"
புங்குடுதீவு - 1 (9478)

## கிரிக்கெட் விளையாட்டு சாதனங்கள் அன்பளிப்பு

காங்கேசன்துறை,பெப்6

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான கிரிக்கெட் விளையாட்டு சாதனங்களை கல்லூரி பழைய மாணவர் சங்கம் அன்பளிப்பு செய்துள்ளது.

கடந்தகாலவன்செயல்களின்போது இக்கல்லூரிக்கு சொந்தமான 50 ஆயிரம் ரூபா பெறுமதியான கிரிக்கெட்விளையாட்டு சாதனங்கள் சேதமுற்றும், காணமல் போயும் விட்டதால் இக்கல்லூரி மாணவர்கள் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபடமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர். (இ-68)

## ரயில்மோதி மரணம்

வட்டக்கச்சி, பெப் 6

ரயில் மோதியதால் கா. மாரிமுத்து (வயது 40) என்பவர் மரணமானார்.

கிளிநொச்சி 154-ஆம் கட்டையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இறந்தவர்விறகுவெட்டும் தொழிலாளி என்றும் காது கேளாதவர் என்றும் மரணவிசாரணை நடத்திய திரு க. திருலோகமூர்த்தியிடம் தெரிவிக்கப்பட்டது. (இ-163)

## புலவருக்கு பொன்னாடை

யாழ்ப்பாணம்,பெப்.6

ஆலயமணி சமய சஞ்சிகை ஆசிரியர் புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஊரெழுவில் நடைபெற்ற திருவாசக விழாவில் ஆற்றிய சொற்பொழிவுகள் சமயப்பணிகள் ஆகியவைகளைப் பாராட்டும் முகமாக ஊரெழு கம்பன் கழகத்தினர் இவரைப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி புலவருக்குப் பொன்னாடை போர்த்தி ஆசி வழங்கினார். (ச)

சுயதொழில் முயற்சிக்கு ஊக்கம்:

## படித்த பெண்களுக்கு திருநெல்வேலியில் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், பெப். 6

சுயதொழில் முயற்சியில் ஈடுபட ஆர்வமுள்ள படித்த பெண்களுக்கு மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் திருநெல்வேலியில் பயிற்சி நெறிகளை ஒழுங்கு செய்துள்ளது,

இப்பயிற்சி நெறிகள் கோழி வளர்ப்பு, நாற்று மேடை பராமரிப்பு, கைப்பணி, பயிர்ச்செய்கை, தையல், உணவுப் பொருள்கள் பதன்படுத்தல், பூங்கனியியல் ஆகியனவாகும்.

பயிற்சிக் காலம் இரண்டு வாரங்கள் தொடக்கம் 6 வாரங்கள் வரை இருக்கும்.

இப்பயிற்சி நெறிகளில் பங்குபற்றுபவர்கள் பயிற்சி முடிந்தபின் சுயதொழில் ஆரம்பிப்பதற்கு வங்கிகள் மூலம் கடன் பெறுவதற்குத் தகுதி பெறுவார்கள்.

பயிற்சி நெறிகள் மார்ச் முதலாம் திகதி ஆரம்பமாகும். இதற்குரிய விண்ணப்பங்கள் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன் பண்ணை முகாமையாளர் [பயிற்சி] விவசாயப் பயிற்சி நிலையம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு பகுதி விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர் அல்லது விவசாயப் பயிற்சி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பயிற்சி நிலையப் பொறுப்பதிகாரி கேட்டுள்ளார். [இ]

## மணிமண்டபம் திறப்புவிழா

நீர்வேலி, பெப். 6

திருக்கேதீச்சுவரத்தில் அகில இலங்கை விஸ்வகர்மகுல சங்கத்தினரால் அமைக்கப்பட்ட 'மஹாதுவட்டா மணிமண்டபம்' இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. க. தெய்வசிகாமணியால் திறந்துவைக்கப் படும்.

ஆலய ஆலோசனைச் சபைத் தலைவர் திரு. எஸ். கணேஸ் மங்கல விளக்கேற்றிவைப்பார்.

உப - தலைவர் திரு. ச. வடிவேலு தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் சங்க செயலாளர் த. பரராசசிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார். விழாவையொட்டி சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படும்.

வெளியீட்டுரையை பண்டிதர் மு. கந்தையா நிகழ்த்துவார். (இ- 110)

## அத்திவாரக் கல் நடும் விழா

யாழ்ப்பாணம் பெப் 6

புதுமுறிப்பு அருள்மிகு கற்பக விநாயகர் ஆலயத்துக்கு அத்திவாரக் கல் நடும் வைபவம் எதிர்வரும் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ இ. நாகேந்திரக் குருக்களால் நடத்தப்படும் இவ்வைபவம்காலை மணி 8 34 க்கும் 10 05 க்கும் இடையில் வரும் [illegible] நிகழும். (ஒ)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம் பெப் 6

யாழ் நகரப்பாடசாலைகளுக்கான பாடசாலைச் சுகாதாரக் கல்விக் கருத்தரங்கு இன்று 6 ஆம் திகதி காலை 8.30 தொடக்கம் மாலை 2 30 வரையும் வேம்படி மகளிர் கல்லூரியிலும் நாளை 7 ஆம் திகதி காலை 8 30 தொடக்கம் மாலை 2 30 வரையும் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் நடைபெறும்

இக் கருத்தரங்குகளில் பாடசாலை அதிபர்கள், சேவைக்கால விஞ்ஞான ஆலோசகர்கள், சுகாதாரத்துக்குப் பொறுப்பான பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதாரக்கல்விப் போதனாசிரியர், மேற்பார்வைச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் கலந்து கொள்வார்கள். [ச 18]

## ரூ. 4 லட்சம் அன்பளிப்பு

கொழும்பு, பெப் 6

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் அகதிகள் மறுவாழ்வு நிதியத்துக்கு கனேடியத் தூதரகம் அண்மையில் நான்கு லட்சம் ரூபாவை அன்பளிப்புச் செய்தது.

நிதியத்தின் செயலாளரான திருமதி ஷேர்லீன் டானியல் இது பற்றிச் சொன்னதாவது;

இந்தப் பணத்தைக் கொண்டு வவுனியாவிலும், மட்டக்களப்பிலும் எமது மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ளுவதற்கு உதவுமுகமாக இரண்டு டிராக்டர்களை வாங்க உள்ளோம்

இடம்பெயர்ந்த குடும்பங்கள் மீண்டும் வீடுகளை அமைத்துக்கொள்ள நாம் உதவிவருகிறோம். அனாதைகளான குழந்தைகள் மற்றும் பெண்களுக்கும் உதவி வருகிறோம்.

இப்படி அவர் சொன்னார் [இ-எ]

## விறகு விலை

தற்போது குடாநாட்டில் விறகு விலை அதிகரித்து வருவதினால் சிறுகைத்தொழில் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

விறகு விலை அதிகரிப்பினால் டொபி, சவர்க்காரம் என்பனவற்றின் உற்பத்திச் செலவு அதிகமாகின்றது. கொழும்பிலிருந்து வரும் இனிப்பு வகைகளின் விலையுடன் போட்டிபோட்டு விற்பது மிக கடினமாக இருப்பதாக இனிப்புப்பண்ட உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். [க-72]

## வீதி திருத்தம்

குருநகர் பெப் 6.

யாழ்-ரேகடியில் இருந்துகுருநகர் இறங்குதுறைக்கு செல்லும் வீதி வாகனச் சொந்தக்காரர்களினாலும் பொது மக்களாலும் சீரமைக்கப்பட்டுள்ளது.

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியின் சுகாதாரப் பிரிவுத் தலைவர் திரு. அந்தோனி யேசு, குருநகர் சடற்றெழில் அபிவிருத்திச் சங்கச்செயலாளர் திரு. எஸ். தவரத்தினம் ஆகியோர் இதனை முன்னின்று செயற்படுத்தினர். (க51)

## நவாலி வை. எம். சி. ஏ பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.6

நவாலி வை. எம். சி. ஏயின் 98ஆவதுவருடாந்தப் பொதுக்கூட்டம் 20 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 8. 30 மணிக்கு தலைவர் திரு. ஜே. ஐ. தம்பிராசா தலைமையில் வை.எம் சி ஏயில் நடைபெறும்.

சங்க வருடாந்த திருமறை அறிவு எழுத்துப் போட்டியில் பின்வருவோர் வெற்றிபெற்று பணப்பரிசுகளைப் பெற்றனர்,

விவாக மானவர்கள் பிரிவு:- 1. திருமதி புஷ்பமலர் தம்பிராசா, 2. திருமதி மஞ்சுளா ஆனந்தநாயகம்.

இளைஞர் யுவதிகள் பிரிவு:- 1. செல்வி ஜெபநீதிரு தம்பிராசா, 2. செல்வி அனிற்று சந்திபாலபிள்ளை, 3. செல்வி சுகுணசிவபாலன், 4 செல்வன் அ. ஐசக் அதிசயராசா.

சமயக் குழுத் தலைவர் திரு. டபிள்யூ. என். தேவகடாட்சம் பொறுப்பாளராகவிருந்து போட்டிகளை நடத்தினர். (இ)

## இந்திராபுரம் குள அணைக்கட்டு வேலைகள்

பச்சிலைப்பள்ளி, பெப். 6

இந்திராபுரம் குளம் ஆழமாக்கப்பட்டு அணைக்கட்டு வேலைகளைச் செய்வதற்கு இவ்வருடம் ரூபா 45 ஆயிரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கிளிநொச்சி மாவட்ட சமநலசேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. வே. முருகையா இதனைத் தெரிவித்தார்.

இவ்வேலைகளை இவ்வருட ஏப்ரல் மாதத்திற்குள் பூர்த்தியாக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க-117)

## திருட்டுப் பொருள்கள்மீட்பு

கடந்த கால வன்செயல்களின் போது களவாடப்பட்ட பல பொருள்களை மானிப்பாய் அமைதி காக்கும் படையினர் மீட்டெடுத்து சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளனர்,

இவற்றில்பலபொருள்களை மக்கள் இனம் கண்டுகொண்டதால் அவை உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

சாறிகள், றேடியோக்கள், மணிக்கூடுகள், தொலைக்காட்சிப் பெட்டி, உடுபுடவைகள் போன்ற பொருள்கள் சில இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ளன

உரிமை கோரப்படாத பொருள் விரைவில் ஏலத்தில் விற்கப்படவுள்ளதாக அதிகாரி ஒருவர் உதயனிடம் தெரிவித்தார் [ச 99]

எமது புதிய வெளியீடுகள்

(1) T. ராஜேந்தர் ✶ ஸ்ரீ வித்யா
என் தங்கை கல்யாணி
[Sutha Original]

(2) ராமராஜன் ✶ ரூபினி
ஸ்ரீவித்யா ✶ கவுண்டமணி
'என்னைப் பெத்த ராசா'

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
(C/1449) யாழ்ப்பாணம்.

### பாடசாலையின்

# உயர்வும் தாழ்வும் அதிபரின் கையிலேயே

கொடிகாமம், பெப் 6

ஒருபாடசாலை உயர்வதும் தாழ்வதும் அப்பாடசாலையின் அதிபர் கையிலேதான் பெரிதும் தங்கியுள்ளது ஓர் அதிபர் பாடசாலைப் பணியில் அக்கறை காட்டாமல் வேறு விஷயங்களில் காலங்கழிப்பாராயின் அப்பாடசாலை சீரழிந்துவிடும்.

சாவகச்சேரி கல்விவட்டாரத்தைச் சேர்ந்த கெற்பேலி அ. த. க. பாடசாலை அதிபர் திரு. சி. கந்தையாவின் சேவை நலன் பாராட்டு வைபவத்தில் உசன் கொத்தணி அதிபர் திரு. க. சிவபாதசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இப்படிச் சொன்னார்.

இவ்வைபவம் திரு. சு. சடாட்சரம் தலைமையில் நடைபெற்றது.

திரு. க. குமாரு அதிபர் கந்தையாவின் சேவையைப் பாராட்டிப் பேசும்போது 'ஆசிரியர்கள் நாம்கண்ட தெய்வங்கள். எழுத்தறிவித்தவன் இறைவனாவான். இவ்வதிபர் பதினொரு வருடகாலம் இங்குசெய்த கல்விப்பணி என்றும் அழியாதது என்றார்.

திரு. எஸ். சிதம்பரநடராசா, திரு க. அருணாசலம் திரு சி குலசேகரம் உட்படப் பலர் பாராட்டிப் பேசினர்.

(க-75)

## அம்பாறை மாவட்டத்தில்

# முஸ்லிம் பகுதிகளில் கைகலப்பு அதிகரிப்பு

கல்முனை, பெப் 6

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் பகுதிகளில் கைகலப்புகள் தற்போது அதிகரித்து வருகின்றன.

கடந்த புதனன்று நிந்தவூரில் மீராலெவ்வை ரசாக் (வயது 30) என்பவரை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் ஒருவரின் பாதுகாவலர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளரெனவும் முஸ்லிம் காங்கிரஸ் பாதுகாவலரைத் தாக்க முற்பட்டபோதே அவர் சுட்டுக் கொல்லப்பட்டாரெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மற்றொரு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளரான முன்னாள் பொத்துவில் முதல் எம். பியான ஜனாப் எம். ஏ. எம் ஜலால்டீன் ''தன்னையும் தனது வீட்டில் வைத்துக் கடத்துவதற்கு ஆயுதம் ஏந்திய முஸ்லிம் இளைஞர்கள் பலர் முயற்சி செய்ததாக இங்கு நடந்த கூட்டம் ஒன்றில் வைத்துத் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை ஆகிய பகுதிகளில் கூட்டங்கள் நடைபெறும் சமயங்களில் பலர் கூக்குரலிட்டு கூட்டத்தைக் குழப்புவதாகவும் இந்தியப்படையின் அம்பாறை மாவட்டப் பிரிகேடியர் திரு ரங்கசாமி லோகநாதனிடம் புகாரிடப்பட்டுள்ளது (இ 84)

# வடமராட்சி கிழக்கில் புதிதாக 7 கிராமசேவையாளர் பிரிவுகள்

தாளையடி, பெப் 6

வடமராட்சி கிழக்கில் புதிதாக ஏழு கிராம சேவையாளர் பிரிவுகள் உருவாக்கப்படவுள்ளன.

ஆழியவளை, வத்திராயன், வெற்றிலைக்கேணி, செம்பியன்பற்று தெற்கு, நாகர்கோவில் கிழக்கு, குடத்தனை வடக்கு, பொற்பதி ஆகியனவே புதிதாக உருவாக்கப்படவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளாகும்.

மருதங்கேணியிலுள்ள வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு தி சந்திரசேகரம் தலைமையில் புதிய கிராம சேவையாளர் பிரிவுகள் உருவாக்கப்படுவது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கில் கடமைபுரியும் கிராம சேவையாளர்கள், கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் உட்பட மற்றும் பொதுஸ்தாபனங்களின் பிரமுகர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

தற்போதுவடமராட்சி கிழக்கில் உள்ள 11கிராம சேவையாளர் பிரிவுகளும் புதிய திட்டத்தின் கீழ் 18ஆக அதிகரிக்கப்படவுள்ளன.

பொதுஸ்தாபனங்களின் ஆலோசனைகளை அடுத்து புதிதாக உருவாக்கப்படவேண்டிய கிராமசேவையாளர் பிரிவுகள், அவற்றின் எல்லைகள் என்பன பற்றியும் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (இ-144)

வரையறுக்கப்பட்ட

**நெடுந்தீவு பல நோ. கூ. சங்கம்**

[ யா 1662 — 5 — 12 — 1979 ]

**வெற்றுச் சாக்கு கேள்வி விற்பனை**

வெற்றுச் சாக்குத் தொகை : 2508
விண்ணப்பப்படிவம் : 5/-
மீளளிப்பு வைப்புப் பணம் : 300/-
முடிவு திகதி : 15-02-1989 நண்பகல் 12-00 மணி

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெற்றுச் சாக்கு'' எனக் குறிப்பிட்டு தலைவர், நெடுந்தீவு பல நோ. கூ. சங்கம், நெடுந்தீவு என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்

நெடுந்தீவு ப நோ கூ சங்கம்.
நெடுந்தீவு.
31-01-89

(C/1172)

+
J M. J.

எஸ். பி. அன்ரன் வழங்கும்
வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

**குவைத் நாட்டுக்கு**

கிளினேர்ஸ் ஆட்கள் தேவை

சம்பளம் 35 டினர்.

உணவு, இருப்பிடம் இலவசம்.

**ஆஸ்பத்திரி, விமான நிலையம்**

போன்ற இடங்களுக்கு வேலைவாய்ப்பு

உடன் செய்து கொடுக்கப்படும்.

**ஜேர்மனிக்கு**

16 வயதுக்குட்பட்டவர்களுக்கு

உடன் செய்து தரப்படும்.

**S. P. ANTON**

648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C / 1167)

# வட இலங்கை மருத்துவக் கல்லூரியை தேசியமயமாக்குக

## தூதுக்குழு வலியுறுத்து

கொழும்பு, பெப். 6

வடகொழும்பு மருத்துவக் கல்லூரியைத் தேசியமயமாக்க அரசு தீர்மானிக்கும் பட்சத்தில் வட இலங்கை மருத்துவக் கல்லூரியையும் அரசு தேசியமயமாக்க வேண்டும் என்று அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வட இலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தூதுக்குழு ஒன்று திறைசேரிச் செயலாளர் திரு. ஆர். பாஸ்கரலிங்கம், உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கே. டபிள்யு. தேவநாயகம் ஆகியோரைச் சந்தித்து இவ்வேண்டுகோளைச் சமர்ப்பித்தது.

கோரிக்கையை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக திரு. பாஸ்கரலிங்கம் உறுதியளித்தார். (இ-எ)

# இடமாற்றத்தை எதிர்த்து குமாரின் மனைவி மனு

கொழும்பு, பெப். 6

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலத்தின் மனைவி டாக்டர் திருமதி யோகலட்சுமி பொன்னம்பலம் சமர்ப்பித்த மனு சம்பந்தமாக விரிவான விசாரணை ஒன்றை நடத்த உயர் நீதிமன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை சம்மதித்தது.

டாக்டர் (திருமதி) பொன்னம்பலம் தனது மனுவில் தான் அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைக்கு ஆளாகியிருப்பதாக முறையிட்டிருக்கிறார்.

''கொழும்பு மாநகர சபையின் கொட்டாஞ்சேனை வைத்தியசாலையில் நான் பணியாற்றி வருகின்றேன்.

உள்ளக இடமாற்றங்கள் அனைத்தும் வருகிற ஜூன் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன. அப்படி இருந்தும் என்னை மட்டும் கொழும்பு மாநகர சபை இடமாற்றம் செய்திருக்கிறது''—

இப்படி அவர் மனுவில் குறிப்பிட்டிருக்கிறார்.

மனுதாரரின் கணவர் ஓர் அரசியல்வாதி.

அவரது கட்சி அரசுக்கு எதிரான எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து அரசு வேட்பாளரை எதிர்த்து அணி அமைத்து போட்டியிட்டது.

அதன் காரணமாக அவர் பழிவாங்கப்பட்டுள்ளார்—

இவ்வாறு மனுதாரர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி ஆர். கே. டபிள்யு. குணசேகரா வாதாடினார்

மனுதாரரின் இடமாற்றத்தை விசாரணை முடியும் வரை இடைநிறுத்திவைக்கும் படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பிரதிவாதிகளாக மாநகர மேஜர் சிறிசேன கூரே, மாநகர ஆணையாளர் ஆகியோர் காட்டப்பட்டுள்ளனர். (ச-எ)

# பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழு நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப் 6

இனக்கலவரங்களினால் பாதிக்கப்பட்டு உயிர் இழந்த ஊழியர்களினதும், அவர்களுடைய குடும்பத்தினரதும், விவரங்களைத் திரட்டி அவர்களுக்கும் புனர்வாழ்வு அளிக்கும் திட்டங்களைத் தயாரிக்கும் பணியில் பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக் குழு ஈடுபட்டுள்ளது.

இது வரை இச் சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்காத பாதிக்கப்பட்ட அரச, கூட்டுத்தாபன, [illegible] இந்த நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும்படி அது வேண்டிக்கொள்கிறது. (க)

### நூல் இலவசம்

மகா சிவராத்திரியை முன்னிட்டு சிவதீட்சை வைக்கும் நிலையங்கள், மன்றங்கள், சபைகள் ஆகியவற்றிற்கு ஆறுமுக நாவலரின் ''நித்தியகரும விதி'' என்ற நூலை இலவசமாக வழங்க யாழ்ப்பாணம் மில்க்வைற் ஸ்தாபனத்தார் முன்வந்துள்ளார்கள். தேவையானோர் முன்கூட்டியே விண்ணப்பித்து நூல்களை இலவசமாகப் [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### சித்திரக் கட்டுரைப் போட்டி

கம் உதாவ சித்திரக் கட்டுரைப் போட்டிகள் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்படவுள்ளன.

'வறுமையே விரக்திக்குக் காரணம் என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டிகள் அகில இலங்கை ரீதியாக, தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும்.

ஒன்பதாம் ஆண்டுக்கு மேல் கல்விகற்கும் மாணவர்கள் இந்த இரு போட்டிகளிலும் பங்குபற்றலாம்.

இரண்டு போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு ரொக்கப்பணம் பரிசாக வழங்கப்படவிருக்கின்றது (இ-144)

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

# முஸ்லிம்களை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லும்

## ஏ. ஆர். மன்சூர் கூறுகிறார்

அம்பாறை பெப் 6

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினதும், தலைவர் அஷ்ரபினதும் வழிகாட்டுதல் முஸ்லிம்களை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும்.

முன்னாள் கல்முனைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், முல்லைத் தீவு மாவட்ட அமைச்சருமான ஜனாப் ஏ ஆர். மன்சூர் மேற்கண்டவாறு கூறினார்.

நிந்தவூரில் நடந்த விசேஷ கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மத்திய குழுத்தலைவர் ஜனாப் எஸ் எச். அகமது தலைமையில், நிந்தவூர் 'அகமட் பிரதர்ஸ்' மண்டபத்தில் கருத்தரங்கு நடைபெற்றது.

ஜனாப் மன்சூர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் முஸ்லிம்களுக்குப் பெரும் அபாயம் காத்திருக்கிறது என்பதை எமது மக்கள் உணர வேண்டும்.

சொந்த நலன்களுக்காக அவர்கள் மக்களைப் பலியிடப் பார்க்கின்றார்கள்.

ஏனைய மதத்தவர்களும், கட்சியினரும் முஸ்லிம்களின் பண்பு, பாரம்பரியம், மார்க்கம் என்பவற்றை அவதூறாகப் பேசக்கூடிய நிலை இவர்களால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

சன்மார்க்கத்தை இழுத்து அபாண்டமான, சந்தர்ப்பவாத அரசியலை முஸ்லிம் காங்கிரஸ் நடத்துகின்றது.

எமது மக்களை அரசியலில் இட்டுச் செல்ல அவர்கள் காட்டும் வழி மிக அபாயகரமானதும், எம்மை அழிக்கத் தக்கதும் என்பதை மக்கள் உணர வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-14)

# மூளைசாலிகள் நாட்டைவிட்டு வெளியேறுவது வருந்தத்தக்கது

## மலர் வெளியீட்டு விழாவில் உரை

மானிப்பாய், பெப் 6

அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இருந்து பல கல்விமான்களும் பெரியோர்களும் நமது நாட்டுக்கு வருகை தந்து எமது கிராமத்தில் வைத்தியசாலை, பாடசாலைகள் வழிபாட்டு நிலையங்களை அமைத்துள்ளனர்.

ஆனால் இன்று எமது நாட்டிலிருந்து மூளைசாலிகள் வெளியேறி வருவதையிட்டு வருந்த வேண்டியுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரியர் வைத்திய கலாநிதி திரு. என். சரவணபவானந்தன் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வெள்ளிவிழா மலர் வெளியீட்டு நிகழ்ச்சியின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் சரவணபவானந்தன் மலரை வெளியிட்டு வைத்தார்

அதிபர் திருமதி ச. கல்யாணசுந்தரேசன் மலர் வெளியீட்டு நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார்.

மலரைப் பற்றிய ஆய்வுரை நடத்திய யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி சபா. ஜெயராசா கூறியதாவது:-

''மானிப்பாயின், கல்வி பொருளாதார, வரலாற்றுப் பின்னணிகளை விஞ்ஞான பூர்வமாக ஆராய்ந்து மலரில் விளக்கப்பட்டுள்ளதால் மானிப்பாய் கிராமம் பற்றிய தெளிவான விளக்கத்தை காணமுடிகின்றது.

இந்து-கிறிஸ்தவ மதவேறுபாடுகளிடையேயும் கூட ஒரு ஒற்றுமை காணும் மனப்பாங்கை எடுத்துக் காட்டும் தனித்துவம் கொண்டு மலர் விளங்குகின்றது.

புனித இருதயக் கல்லூரி ஒஸ்மானியா கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி வெளியிட்ட மலர்களை ஆய்வு செய்யும் சந்தர்ப்பம் எனக்கும் கிடைத்தது.

இவற்றுள் மானிப்பாய் மகளிர் மலரின் தரம் வளர்ச்சிப் படைப்புக்களாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்படி அவர் கூறினார்:

விழாவில் யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் திரு. வி. ஆறுமுகம் மானிப்பாய் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன், கொக்குவில இந்துக் கல்லூரி அதிபர் திரு ஏ பஞ்சலிங்கம் பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் திரு. எஸ். சிவகுமாரன் உட்பட பலர் உரையாற்றினர். (ச-90)

# உதவி கோரும் தடுப்புக்காவல் கைதிகள்

கல்முனை பெப் 6

காரைதீவுக் கிராமத்திலிருந்து பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுத் தடுப்பு முகாம்களில் சித்திரவதைக்கு உட்பட்டு தற்போது விடுதலையாகியுள்ள 55 இளைஞர்கள் ஒன்று சேர்ந்து சிறுகைத்தொழில் சங்கமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

அரச வைத்திய உதவிகள் புனர்வாழ்வு உதவிகள் தமக்கும் கிடைக்க வேண்டுமென அவர்கள் கோரியுள்ளனர். (க-84)

**மக்கள் வங்கி**

**அடைவு நகைகள் மீளளித்தல்**

1. யாழ்ப்பாணம் சுன்னாகம், சங்கானை கிளைகளில் அடைவு வைத்து 19-8-88 க்கு முன்னர் பணம் செலுத்தியவர்களின் நகைகள் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதிக்கிளை மூலமாக எதிர்வரும் 7, 8, 9, 14, 16-ஆம் திகதிகளாகிய 5 தினங்களில் வழங்கப்படும்.
2. யாழ்ப்பாணம் பிரதான வீதி, புங்குடுதீவு கிளைகளில் அடைவு வைத்து 19-8-88 க்கு முன்னர் பணம் செலுத்தியவர்களின் நகைகள் யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கிளை மூலமாக எதிர்வரும் 7, 8, 9, 16, 21, 22-ஆம் திகதிகளாகிய 6 தினங்களில் வழங்கப்படும்.

குறிப்பு:

1. மேற்கூறிய சகலருக்கும் தனித்தனிக் கடித மூலம் நகை வழங்கப்படும் திகதி அறிவிக்கப்பட்டிருக்கிறது.
2. நகைகளைப் பெறும் திகதிகளில் காலை 9.00 மணிக்கு
   அ தமது அடையாள அட்டை,
   ஆ. பணம் சட்டிய ரசீது,
   இ. வங்கியால் அனுப்பப்பட்ட கடிதம் ஆகியவற்றுடன் மேற் குறிப்பிட்ட நகைகளை வழங்கும் கிளைகளுச் சமுகமளிக்கவேண்டும்.
3. உரிய திகதிகளில் நகைகளை மீளப் பெறுவிடின் அவை திரும்பவும் பாதுகாப்புக் காரணங்களுக்காக கொழும்புக்கு அனுப்பப்படும். அதனை மீளப் பெறுவதற்கு பலத்த சிரமம் ஏற்படலாம் என்பதை மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

**க. சுப்பிரமணியம்,**
பிரதேச முகாமையாளர் (வ. பி.).

(C/1430)

## 31ஆம் நாள் அந்தியேட்டியும் நன்றி நவிலலும்

**அமரர் வல்லிபுரம் மாணிக்கம்**

(நீர்ப்பாசனத் திணைக்கள ஓய்வுபெற்ற கணக்காளர், தி/ஓய்வூதிய நலன்புரிச் சங்கம், தி/இந்து மயான அபிவிருத்திச் சபை, தி/ஐக்கிய நாணய சங்கம் ஆகியவற்றின் தலைவர்)

பூவுலகில்: 02-05-1911
பொன்னுலகில்: 06-01 1989

அன்பிற்கும் பண்பிற்கும் உறைவிடமாய்
எம் இதயங்களில் அழியாதவராய்
இரங்கும் இதயம் உடையவராய்
ஈசனுக்குரியவராய், உலகிற்கு உத்தமராய்
வாழ்ந்து திடீரென மறைந்தாய்
வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும்
தெய்வத்தின் திருவடி சேர்ந்த தலைவா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதி யாத்திரையிலும், ஆத்ம சாந்திக்காக இடம்பெற்ற சகல கிரியைகளிலும் சமுகம் அளித்தோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வகைகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எங்கள் உளம்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரசடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(9437)

---

## வடக்கிலும் பாதுகாப்பு ஏற்பாடு

கொடிகாமம், பெப். 6

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் வடக்கிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கடவைக்கும் மூவர் வீதம் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-75)

---

## சேதமுற்ற பாடசாலைகளை திருத்த ரூ.99 லட்சம்

மாங்குளம், பெப் 6

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த கால வன்செயல்களின்போது சேதமடைந்திருந்த பாடசாலைகளைப் புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி 99 லட்சம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

இதற்கான நிதி முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளரிடம் வழங்கப்பட்டுத் திருத்தவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. [க-94]

---

## இடமாற்றம்

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகத்தில் கிராமசபைஉத்தியோகத்தராகக் கடமை ஆற்றிய திரு. கே. சபாரத்தினம் ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைமையலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். [ச-16]

---

## அதிகாரங்களைக் கையளிக்கத்தவறும் மத்தியஅமைச்சுஅதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை

மாகாண சபைகளுக்கு அதிகாரங்களைக் கையளிக்கத் தவறும் மத்திய அமைச்சுக்களின் அதிகாரிகள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

அண்மையில் மட்டக்களப்புக்கு ஜனாதிபதி பிரேமதாசா விஜயம் செய்திருந்தார்.

அதிகாரப் பரவலாக்கல் பற்றிய தனது உத்தரவு சரிவர அங்கு அமுல் நடத்தப்படவில்லை என்பதை அவர் கண்டார்.

அதைத் தொடர்ந்தே ஜனாதிபதி முன் கண்டவாறு உத்தரவிட்டார் என்று அமைச்சரவைப் பேச்சாளர் திரு. பெஸ்டஸ் பெரேரா சொன்னார். (அ-எ)

---

## அம்பாறையில் கோமாரி

கல்முனை, பெப். 6

அம்பாறை மாவட்டத்தில் கால்நடைகள் தற்போது அதிக அளவில் கோமாரி நோயால் இறந்து வருகின்றன.

பாதிப்படைந்துள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் இது விடயத்தில் நடவடிக்கை எடுத்து தங்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-84)

---

உ
ஓம் சாயிராம்
விராட்விஸ்வ பிரம்மனே நமஹ

## 8ஆவது ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**எஸ். கே. சேனாதிராசாப் பத்தர்**

தோற்றம்: 04 06- 1927
மறைவு: 06 02- 1981

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் பிரகாசித்த எங்கள் அப்பாவே! நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து எட்டாண்டு காலம் சென்றாலும் உங்கள் நினைவு எம்மைவிட்டு எந்நாளும் பிரியாது! இன்றைய எட்டாம் ஆண்டு நினைவு தினத்தில் என்றும் நிறைந்திருப்பீர்கள் என்று பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

'ஸ்ரீ வாசம்'
கொக்குவில் கிழக்கு.
கொக்குவில்.

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மைத்துனி, மருமகன்மார்,
பேரன், பேத்திமார்.
(8947)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

**செல்லமுத்து சிவப்பிரகாசம்**

(இளைப்பாறிய ஆசிரியர், வளலாய்.)

தோற்றம்: 28-04-1914
மறைவு 07-01-1989

எங்கள் குடும்பத்தின் தலைவனாய், வழிகாட்டியாய், ஒளிவிளக்காய் அன்புடன் வாழ்ந்து, எம்மை வாழவைத்த அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகளும் வீட்டுக்கிரியைகளும் வளலாயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் 06-02-1989 திங்கட்கிழமை இன்று நடைபெற இருப்பதால், இவ்வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

'முதலியார் வளவு'
'சிவபதி வாசம்'
வளலாய்.
அச்சுவேலி

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(8949)

---

## 90ஆம் நாள் நினைவஞ்சலி

**கந்தசாமி தெட்சணாமூர்த்தி**

மலர்வு: 28- 01- 1929
உதிர்வு: 9- 11- 1988

எமது குடும்ப ஒளிவிளக்கே! எங்கே நீங்கள் மறைந்துவிட்டீர்கள்! பாசமுடனும், பரிவுடனும் எம்மை வாழவைத்து, வழி நடத்திய தெய்வமே! எங்கள் வாழ்வு உள்ள வரை உங்கள் நினைவு எம் நெஞ்சில் வாழும்!

குடும்பத்தினர்.

துன்னாலை தெற்கு,
கரவெட்டி

(8943)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**திரு. க, அரியரட்ணம்**

தோற்றம்: 06-08-1920
மறைவு: 22-10-1987

**திருமதி அ. தவமணி**

தோற்றம்: 31-01-1933
மறைவு: 19-01-1988

அழுதும் மனம் ஆறவில்லை
ஆனாலும் என்ன செய்வோம்?
மெழுகு போல் உருகி நின்றும்
மென் விழிகள் பெருகிட நின்றும்
பொழுது தான் ஓராண்டு போய் விட்டது
புலம்பியும் என்ன பலன்?

கனவிலே உம் நிழலைக்
கண்டு நின்றோம்
நினைவிலே உம் நினைவைப்
பதிந்து நின்றோம்
நிஜமாக நாம் உம்மை
மறக்கவில்லை

நித்தம் உம் பாதத்தில்
வைத்தோம் மலர்கள்,

ஞானவயிரவர் கோவிலடி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

அப்பா, அம்மா பிரிவால் வாடும்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரர்கள்.**
(8929)

---

## 5ஆம் வருட நினைவஞ்சலி

அன்னை மடியில்
09-03-1917

அரனடியில்
01-02-1984

திதி: 06.02.1989

**திருமதி அசுபதி சின்னத்தம்பி**

பனை, தெல்லிப்பழை

ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி மீளாத துயில் கொண்ட சிவநெறி வழுவா எங்கள் அன்னையே உங்கள் நினைவு எங்கள் நெஞ்சத்திலே அணையா ஒளித்தீபமாக ஒளிவீசும் உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள்குல தெய்வமாகிய அன்னை பராசக்தியைப் பிரார்த்திக்கும்

கணவன், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'பதியகம்'
சந்திவாசா,
பனை, தெல்லிப்பழை:

(9447)

பொய்யாமொழி

குறள்:
வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க்கு இனிது.

**பொருள்:**

நீதி நெறி முறைகளை மதிக்காதவனாகவும் நியாயத்துக்கு ஒத்த காரியங்களைச் செய்யாதவனாகவும் பழிபாவங்களுக்கு அஞ்சாதவனாகவும் நற்குணமில்லாதவனாகவும் உள்ள ஒருவனைத் தோற்கடிப்பதில் அவனுடைய பகைவர்கள் மகிழ்ச்சி கொள்வார்கள்.

உதயன்

இல. 292/3 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 22078
06. 2. 1989 த. பெ. இல23

# வீதியோரக் கட்டடங்கள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் சட்ட விதிகளையும், ஒழுங்கு முறைகளையும் மீறி கட்டடங்கள் அதிக எண்ணிக்கையில் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதிகளின் ஓரங்களில்கூட ஒழுங்கு விதிகளை மீறி நிரந்தரக் கட்டடங்கள் நிறையக் கட்டப்பட்டுள்ளன என்றும் கண்டறியப்பட்டிருக்கிறது.

வீதி ஓரங்களில், விதிகளை மீறிக் கட்டப்படும் சகல கட்டடங்களையும் தகர்ப்பதற்கு தமக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாகப் பெருந்தெருக்கள் அதிகாரசபை வட்டாரங்கள் எச்சரித்துள்ளன.

எந்த ஒரு இடத்தையும் அமைப்பாக, ஒழுங்காக, அழகாக வைத்திருப்பது தான் சிறப்பு.

அலங்காரத்தைப் பற்றி அக்கறைகொள்ளாதவர்கள், அப்படிச் செய்வதற்கும் பண வசதி இல்லாதவர்கள் கூட, தமது இல்லத்தை ஒழுங்கு முறையிலும், அமைப்பாகவும், துப்புரவாகவும் வைத்திருக்க விரும்புவது இயல்பு.

வீட்டுக்கே அமைப்பும், ஒழுங்கும் தேவையானால் கிராமத்துக்கு, நகரத்துக்கு, நாட்டுக்கு அவை எவ்வளவு பிரதானமானவை என்பதை விரித்து விளக்க வேண்டியதில்லை.

ஆனால் அவற்றின் அவசியத்தை மக்களில் பெரும்பாலானவர்கள் உணர்ந்துகொள்வதாக இல்லை. தமது வீட்டை அழகாகவும் சீர்படவும், சிறப்பாகவும் வைத்திருக்க வேண்டும் என்று விரும்புபவர்கள், அவற்றுக்காகப் பெரும் பணத்தை செலவிடுபவர்கள் கூட, நகரத்தின், நாட்டின் அழகை, அமைப்பை, எழிலைப் பற்றிச் சிந்திப்பதில்லை; அக்கறை கொள்வதில்லை,

தனது வீட்டைப் போலவே, நாட்டையும் பேண வேண்டும், சிறப்பாக, எழிலாக வைத்திருக்க வேண்டும் என்று மக்களில் எத்தனை பேர் நினைக்கிறார்கள்? செயலில் காட்டுகிறார்கள்?

தமது வசதியையும் வாய்ப்பையும் கருதி, கண்ட கண்டமாதிரிக் கட்டடங்களை எழுப்புகிறார்கள். சிலர் தங்கள் சுகாதார வசதிக்கு கேடு விளைவிக்கும் விதத்தில் கூட கட்டடங்களை நிர்மாணித்து விடுகிறார்கள்.

அவற்றைக் கண்டுபிடித்து திருத்த முயலும் (சில சந்தர்ப்பங்களில் தண்டனையும் உண்டு) அதிகாரிகளைத் தூஷிக்கிறார்கள்; அல்லது லஞ்சம் கொடுத்து தமது சட்டமீறலுக்குத் துணைபோகச் செய்கிறார்கள். பாவங்கள் அவர்கள்! தமது பணத்தைச் செலவு செய்து தமக்குத் தாமே தீங்கு செய்கிறார்கள் என்பதைப்புரிந்து கொள்வதில்லை.

எந்தத் தேசத்துக்கும், நாடு நகர நிர்மாணக் கொள்கைகள், திட்டங்கள் அவசியம். அவை வேறு நாடுகளில் இருந்து 'காப்பி' அடிக்கப்படக்கூடாது. அந்தந்தப் பிரதேசத்துக்கு ஏற்ப, அவற்றின் இயற்கை, சூழல், வளம், மக்கள் தேவை, சுகாதாரம் என்பவற்றுக்குப் பொருத்தமான விதத்தில் நகர நிர்மாணத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

நகரங்களுக்கு மட்டுமென்ன, கிராமங்களுக்கும் நிர்மாணக் கொள்கைகளும், ஒழுங்கு விதிகளும் அவசியம்.

கிராமங்களுக்கு நிர்மாணக் கொள்கைகள் வகுக்கப்படும் போது அவற்றின் இயற்கை எழில் உருக்குலையாமல் இருக்கவும், வளங்கள் கெடுக்கப்படாமல் இருக்கவும் பார்த்துக் கொள்வது அவசியம்.

நிர்மாணக் கொள்கைகள் யாவும் அவ்வப் பிரதேச நலன், மக்கள் நலன், மக்கள் தேவை என்ற அத்திவாரங்களில் வைத்துக் கட்டி எழுப்பப்படுவது மிக மிகப்பிரதானமானது.

அவ்வாறு தயாரிக்கப்படும் கொள்கைகள், திட்டங்கள் பாதிக்கப்படாத விதத்தில் ஒழுங்கு விதிகள், சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். அவற்றை மீறாமல், மக்கள் ஒத்துழைக்க வேண்டும் அதிலிருந்து மக்கள் தவறினால் அவர்கள் தங்களுக்குத் தாமே கேடு செய்தவர்கள் ஆவர் தண்டனையால் திருத்துவதைவிட, மனதால் திருந்துவதே பயனுடையதும், சிறப்பு மிகுந்ததும் ஆகும்.

## காங்கிரஸுக்கு வேண்டுகோள்

மதுரை, பெப் 5 எதிர்வரும் நாடாளுமன்றம் மற்றும் மாநகராட்சித் தேர்தல்களில் அ. தி. மு. க. ஜெயலலிதா அணியுடன் கூட்டு வைத்துப் போட்டியிடும்படி இந்திரா காங்கிரஸுக்கு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது

அகில இந்திய போர்வேர்ட் புளொக் பொதுச் செயலாளர் அமர் மஜும்தார் இந்த வேண்டுகோளை விடுத்தார். (எ)

---

தமிழ்நாடு சட்டசபை

# ஆளுநர் உரை பெப்.11இல்; சபாநாயகர் தமிழ்க்குடிமகன்!

சென்னை, பெப் 5 தமிழ்நாடு சட்டசபை இம்மாதம் 11 ஆம்திகதி அங்குரார்ப்பணஞ் செய்யப்படவிருக்கிறது.

அன்று காலை 11 மணியளவில் ஆளுநர் டாக்டர் பி. ஸி. அலெக்ஸாண்டர் அங்குரார்ப்பண உரையை நிகழ்த்துவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் உரையில் தி மு. க. அரசின் கொள்கை விளக்கமும் செயல் திட்டங்களும் வெளியிடப்படும்.

கடந்த வாரம் இடம் பெற்ற தி மு க. அமைச்சரவையின் முதலாவது கூட்டத்தில் ஆளுநர் உரையில்இடம் பெற வேண்டிய விஷயங்கள் விவாதிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்பட்டன.

தமிழ்நாடு சட்டசபை நாளை (6-1-89) காலை 10 மணிக்குக் கூடுகிறது அப்போது புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட எம். எல். ஏக்களுக்கு தற்காலிக சபாநாயகர் திரு. கே. ரமணி பதவிப் பிரமாணஞ் செய்து வைப்பார்.

பின்னர் சட்டசபை இம்மாதம் 10 ஆம் திகதி மீண்டும் கூடும்; அப்போது சபாநாயகர், உபசபாநாயகர் ஆகியோர் தெரிவு செய்யப்படுவர்.

சபாநாயகராக இளையான்குடி எம். எல்' ஏ. ஆகத் தெரிவு செய்யப்பட்ட திரு. தமிழ்க்குடிமகன் என்பவரை தி. மு. க. கூட்டணி நிறுத்துகிறது.

பெரும்பாலும் இவர் போட்டியின்றி தெரிவு செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு தமிழ்க்குடிமகன் எம். ஏ. பட்டதாரி, தனித் தமிழ் இயக்கத்தில் ஆர்வம் கொண்டவர். மதுரை யாதவர் கல்லூரி அதிபராகப் பணியாற்றியவர்.

'தென்மொழி' பத்திரிகையில் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். (எ)

## முதலமைச்சர் கருணாநிதி அங்காள அம்மனை வழிபட்டார்

தஞ்சாவூர், பெப். 5 பிறந்த ஊரான திருக்குவளைக்கு விஜயம் செய்த முதலமைச்சர் மு. கருணாநிதி அங்குள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்திற்குச் சென்று பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

பின்னர் திருவாரூரில் முதலமைச்சர் செய்தியாளர் மத்தியில் பேசினார்.

அப்போது அவர் சொன்னதாவது;

தமிழ்நாடு அமைச்சர்களும் சொத்துக்களை வெளியிடவேண்டும்.

வெளியிடுவதில் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை எனது அரசு விரைவில் அறிவிக்கும்.

மத்திய அரசு பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதாக உத்தரவாதம் தந்திருப்பதால் கூடங்குளம் அணுமின் நிலையத்தைக் கட்டமுடியும்.

இப்படி திரு. கருணாநிதி சொன்னார். (எ)

## தென் ஆபிரிக்காவில் புதிய அரசியல் கட்சி

கேப்டவுண், பெப் 5 நிறவேற்றுமைக்கு எதிராகப் போராடும் மூன்று அரசியல் கட்சிகள் ஒன்று சேர்ந்து புதிய அரசியல் கட்சி ஒன்றை தென் ஆபிரிக்காவில் அமைக்க முடிவு செய்துள்ளன.

இதுகாலவரை தென் ஆபிரிக்க அரசின் நிறவேற்றுமைக் கொள்கைகளை விபரல் கட்சியும் முற்போக்கு சமஷ்டிக் கட்சியுமே எதிர்த்து வந்தன. பின்னர் பிரிட்டனில் தென் ஆபிரிக்க தூதராக விளங்கிய ராஜதந்திரி ஒருவர் ஆரம்பித்த கட்சியும் நிறவேற்றுமைக்கு எதிராகக் குரல்கொடுத்து வந்தது.

இப்போது இம் மூன்று கட்சிகளும் ஒன்று சேர்ந்த ''ஜனநாயகக் கட்சி'' என்ற பெயரில் புதிய அரசியல் கட்சியை ஆரம்பித்துள்ளன.

வருகிற ஏப்ரலில் புதிய கட்சி முறைப்படி அங்குரார்ப்பணம் செய்யப்படும். (எ)

## பெனாஸிர் வென்ற தொகுதி எதிர்க்கட்சிக்குப் போனது

இஸ்லாமபாத்,பெப் 5 பாகிஸ்தானில் அண்மையில் நடந்த நாடாளுமன்ற இடைத் தேர்தலில் பிரதமர் பெனாஸிர் பூட்டோ வெற்றிபெற்ற இரண்டு தொகுதிகளில் ஒன்றை எதிர்க்கட்சியான இஸ்லாமிய ஜனநாயக அணி கைப்பற்றியது.

கடந்த நவம்பர் 19 தேர்தலில் திருமதி பெனாஸிர் லாகூரிலும் லர்க்கானா தொகுதியிலும் ஒரே சமயத்தில் வெற்றியீட்டினார்.

பின்னர் லாகூர் தொகுதியை ராஜினாமாச் செய்தார்.

அதற்குகடந்த வாரம் இடைத்தேர்தலில் நடந்தது. நவம்பர் தேர்தலில் திருமதி பெனாஸிரிடம் தோற்ற எதிர்க்கட்சி வேட்பாளர் மெயின் உமர் ஹியாத் மீண்டும் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

திருமதி பூட்டோ சுமார் 4ஆயிரம் வாக்குகளால் வெற்றி பெற்ற தொகுதியை இவர் 5, 750 வாக்குகளால் கைப்பற்றினார். (எ)

## பரகுவேயில் அமைதி

அஸான்சியன், பெப். 5 பரகுவேயில் அமைதி நிலவுகிறது.

பதவி இழந்த ஜனாதிபதி ஸ்ரோஸ்னர் இன்னும் ராணுவத் தலைமையகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அரசியல் தஞ்சமளிக்க சிலி அரசு முன்வந்தது. அதை அவர் நிராகரித்து விட்டார் (எ)

## ஜலலபாத் வீழ்ச்சியில் ஆப்கனின் எதிர்காலம்

காபூல், பெப். 5 ஆப்கன் தலைநகர் காபூலைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஆப்கன் இராணுவம் ஈடுபட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

காபூல் விமான நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த சோவியத் துருப்புக்களின் எண்ணிக்கை நேற்று ஆயிரமாகக் குறைந்தது

சோவியத் துருப்புக்களின் கடைசி அணி, சலோன் நெடுஞ்சாலை ஊடாக சோவியத் யூனியனுக்குச் நேற்று சென்று கொண்டிருந்தது. சுமார் 200 மைல் பயணஞ் செய்தே இந்த அணி ஆப்கன் எல்லையை அடையும்.

காபூலில் எஞ்சியுள்ள ஆயிரம் சோவியத் துருப்புக்களும் பின்னர் விமான மூலம் தாயகம் திரும்பும்

இதனிடையில் - ஆப்கனில் உள்ள பெரிய நகரமான ஜலலபாத், கெரில்லாக்களினால் கைப்பற்றப்படும் நிலை ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

முஜாஹிதீன் கெரில்லாக்களிடம் ஜலலபாத் எப்படி வீழ்ச்சி அடைகிறதோ அதைப் பொறுத்துத்தான் ஆப்கனின் படுகொலைகள் இடம் பெறுமா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க முடியும் என்று ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

சோவியத் படை விலகலின் பின்னர் ஆப்கன் நிலை என்ன என்பதை ஜலலபாத் வீழ்ச்சி தீர்மானிக்கப்போகிறது என்று லண்டனின் சண்டே டைம்ஸ் நாளிதழ் தெரிவித்தது.

ஆப்கன் ராணுவம் சண்டை இன்றி, கெரில்லாக்கள் ஜலலபாத்துக்குள் நுழைய அனுமதிக்குமா என்பதைச் சொல்ல முடியாதிருப்பதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது. (எ)

## பிறந்த மண்ணை நாடுகின்ற மாஜி அதிபர் மார்க்கோஸ்

மணிலா, பெப் 5 சாவின் விளிம்பில் உள்ள முன்னாள் அதிபர் பேர்டினண்ட் மார்க்கோஸை தாய் நாட்டில் இறக்க அனுமதிக்கும்படி அவரது மனைவி இமெல்டா மார்க்கோஸ்பிலிப்பீன்ஸ் அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

திருமதி இமெல்டா மார்க்கோஸ் தொலைபேசியில் பிலிப்பீன்ஸ் உப ஜனாதிபதி சல்வர்டோர் லௌறலுடன் தொடர்பு கொண்டு இந்த வேண்டுகோளை விடுத்தார்.

உப ஜனாதிபதி லௌறல், ஜனாதிபதி அக்கியூனோவுடன் அரசியல் கருத்து வேறுபாடு கொண்டு இருக்கிறார் என்பது தெரிந்ததே.

தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து உப ஜனாதிபதிஹவாய்சென்று திரு மார்க்கோஸைப் பார்வையிட்டார். பின்னர் மணிலா திரும்பி வந்து, திரு. மார்க்கோஸ் தாயகம் திரும்ப அனுமதிக்கும்படி ஜனாதிபதி அக்கியூனோவுக்கு வேண்டுகோள் விடுத்தார். (எ)

## வெளி உலகில்

---

# ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற தொடர்ந்து வாசியுங்கள்

## மாணவருக்கு வித்தியாதிபதி புத்திமதி

யாழ்ப்பாணம், பெப். 6 பயில்வதற்கு வயது, கால எல்லைகள் கிடையா. ஆகவே ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சி பெறுவதற்கு நீங்கள் தொடர்ந்து படித்துக்கொண்டே இருக்க வேண்டும். பாடப்புத்தகங்களைப் பயின்றதோடு ஆங்கிலக்கல்வி முடிந்துவிட்டதாக நினைக்காதீர்கள்.

ஆங்கிலத்தில் உள்ள நாவல்கள், சஞ்சிகைகள், கவிதைகள், சிறுகதைகள், பத்திரிகைகளைத் தொடர்ந்து படித்துக்கொண்டே இருங்கள்; வாசியுங்கள். அப்போதுதான் ஆங்கில மொழி மூலம் பயின்றவர்கள் போல நீங்களும் அந்த மொழியில் சிறப்பான தேர்ச்சி அடைய முடியும்.

இவ்வாறு யாழ் மாவட்ட ஆங்கிலக் கல்வி வித்தியாதிபதி திரு. ஆர். கே. குலசேகரம் பல்கலைக் கழகத்துக்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்குப் புத்திமதி கூறினார்.

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் ஆங்கிலப் பயிற்சி பெறும் மாணவர்கள் தமது பாடநெறி பூர்த்தியாவதை முன்னிட்டு 'த புரோகிரஸ்' என்ற சஞ்சிகையை வெளியிட்டனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இந்து மகளிர் கல்லூரியில் நடந்த பிரஸ்தாப சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே திரு. குலசேகரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது.-

ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்தோர் இந்த நாட்டின் மொத்தச் சனத் தொகையில் 0.001 சதவீதத்தினரே ஆவர். 1956 இல் 5 சதவீதமாக இருந்த இந்த எண்ணிக்கை சுமார் முப்பது வருட காலத்தில் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது.

எனினும் அப்போதும், இப்போதும் இச் சிறு பகுதியினரே சமூகத்தின் சகல துறைகளிலும் ஆளுமை உள்ளவர்களாக விளங்குகிறார்கள். இதனை உணர்ந்து ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சி பெற்றால் தான் நீங்கள் பல்கலைக்கழகத்தில் வாங்கப்போகும் பட்டம் பெறுமதியானதாக இருக்கும் - என்றார்.

சஞ்சிகை வெளியீட்டு விழாவுக்கு மாணவர் மன்றத் தலைவர் செல்வன் ரி. ஜெயராகவன் தலைமை வகித்தார்.

பாடநெறிப் பொறுப்பாசிரியர் திரு. கே. புவனசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பிரபல தொழிலதிபர் திரு. எஸ் தியாகராசா, உதயன் - சஞ்சீவி ஆசிரியர் திரு. ம. வ. கானமயில்நாதன் ஆகியோர் சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டனர்.

சஞ்சிகையில் அட்டைப்படத்தை வரைந்த மாணவன் செல்வன் எம். குருபரனுக்கு பரிசு வழங்கப்பட்டது.

மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## கூ.சங்கத்துக்கு பாராட்டு

கொடிகாமம் பெப்.6 1987 ஆம் ஆண்டு ஆகஸ்ட்மாதப் பகுதியில் வடமராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு இச்சங்கம் செய்து வைத்த உதவிகள் அளவிடற்கரியன

கொடிகாமம் தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கத்தின் பொதுச்சபை கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து [illegible] அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு [illegible] பிள்ளை கூறினார்.

கூட்டம் சங்கத்தலைவர் திரு.அ. திருநவுக்கரசு தலைமையில் நடைபெற்றது. உபதலைவர் திரு க. வாரித்தம்பி திரு க.சி யோகராசா ஆகியோரும் உரையாற்றினர். (க-75)

## அபிராமிபட்டர் விழா

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அபிராமி பட்டர் விழா இன்று 6ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

மாணவரின் பாதுகாப்புக் கருதிய

# ஆசிரியர் சேவையை துரதிஷ்டவசமாக தொடர முடியாது போய்விட்டது

## யாழ். இந்து ஆசிரியரின் இறுதிச்சடங்கில் உரை

யாழ்ப்பாணம்,பெப் 6 மாணவர்களின் பாதுகாப்புக் கருதி அவர்களை வாங்கின் கீழ் படுக்க வைத்து விட்டு தானும் பாதுகாப்புத் தேடிய சமயம் எங்கிருந்தோ வந்த துப்பாக்கி வேட்டு ஆசிரியரின் மார்பில் பாய்ந்தது.

யாழ். இந்துக் கல்லூரியில் மரணமடைந்த ஆசிரியர் எஸ். சண்முகலிங்கத்தின் இறுதிச் சடங்குகள் கடந்த 29 ஆம் திகதி நடைபெற்றன.

இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ். பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் திரு. பொன்னம்பலத்தின் தலைமையிலேயே இரங்கல் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

அதிபர் மேலும் பேசுகையில்;

'ஜனவரி மாதம் முற்பகுதியில்தான் இவர் மாற்றலாகி இந்துக் கல்லூரிக்கு வந்தார்.

ஆனாலும் துரதிஷ்டவசமாக இவருடைய சேவை தொடராமல் போய்விட்டது என்றார்.

தமிழர் ஆசிரிய சங்க செயலாளர் திரு. மகாசிவம் உரையாற்றும் பொழுது அமரர் சண்முகலிங்கத்துக்கு ஏற்பட்ட இந்த நிகழ்வு எந்த ஆசிரியருக்கும் இனி ஏற்படக்கூடாது.

இந்தசம்பவம் குறித்து நான் ஆழ்ந்த கவலை அடைகிறேன்.

இனிமேலும் இப்படி நடவாமல் பார்த்துக் கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்

அன்னாரின் இழப்பு கல்வி உலகுக்கும், அவரின் குடும்பத்துக்கும் பேரிழப்பாகும் என்றார்.

வெளிவாரிப் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் சார்பில் திரு. குழந்தையும் செங்குந்தா இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், யாழ் இந்துமகளிர் கல்லூரி, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை, உடுத்துறை மகாவித்தியாலயம், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மற்றும் கல்லூரிகளின் அதிபர்களும் இரங்கல் உரை நிகழ்த்தினார்கள்.

மற்றும் மாந்தை உதவி அரசாங்க அதிபர், கமநல சேவை உத்தியோகத்தர், வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர், ஆகியோருடன் மாணவ ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகளும் உரையாற்றினார்கள். (இ-10)

## அன்பளிப்பு

குருநகர் பகுதியிலுள்ள சிகை அலங்கரிப்பாளர் குடும்பங்களுக்கு யாழ். மறைவட்ட மனித முன்னேற்ற நடு நிலையத்தால் கத்தோலிக்க திருச்சபையின் நிவாரணப் பணி மூலமாக தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இப்பகுதியைச் சேர்ந்த 10,குடும்பங்கள் பங்குத் தந்தை வண- பிதா, பி எம். இம்மானுவேல் அடிகளாரிடம் இது தொடர்பாக விண்ணப்பித்திருந்தன (ச51)

## கும்பாபிஷேகம்

வட்டுக் கோட்டை அடைக்கலந் தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தனமஹா கும்பாபிஷேகம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறும். (க)

## மாசிமக இலட்சார்ச்சனை

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மாசிமக இலட்சார்ச்சனை 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையுள்ள பத்துத் தினங்களுக்கு நடைபெறும். 20 ஆம் திகதி ஏகாசிதி கலசாபிஷேகம் நடைபெறும்.

இலட்சார்ச்சனை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி பகல் 11 மணி உச்சிக்கால பூசையுடன் முடிவடையும். மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும் சாயரட்சைப் பூசை மாலை 6 மணிக்கு அர்த்தசாமப் பூசையுடன் முடிவடையும்.

மாசிமக விசேட உற்சவம் 20 ஆம் திகதி அதிகாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகி பகல் 11 30 மணி உச்சிக்காலப் பூசையுடன் முடிவடையும்.

அன்றைய தினம் மாசிமகதீர்த்தம் துர்க்கா புஷ்கரணியில் காலை 6 மணிக்கு நடைபெறும். (ச)

விசாகாசோப்பு
(ஆயுள்வேத வாசனை சோப்)
சகல விதமான சரும வியாதிகளுக்கும் சிறந்தது
சித்தாலேப
தடிமல், தலையிடி, காய்ச்சல், வாதம், நோ'உளை
முதலிய அநேக நோய்களுக்கு கைகண்டது.
கிடைக்கும் இடம்:
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துச்சரக்கு வியாபாரம்,
யாழ்ப்பாணம்.

உதயன்

06 • 02 • 1989 திங்கட்கிழமை

சுப்பிரிவிக்கி பற்பொடி
ஆயுள்வேத மூலிகை பற்பொடியில்
கடுக்காய், சாதிக்காய், நெல்லி திற்பலி,
மிளகு, கிராம்பு, வேப்பம்பட்டை, உப்பு
முதலியன சேர்த்துத் தயாரிக்கப்பட்டது.
இது சகல பல் வியாதிகளையும் குணப்படுத்தி
வாய் சுத்தமாகவும் துர்நாற்றமின்றியும்
வைத்து இருக்கும் தயாரிப்பு- சித்தாலேபா
கிடைக்கும் இடம்:
க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## கிளிநொச்சி, முல்லைத்தீவு

# மக்களின் அடகு நகைகளை

## அடுத்த வாரம் விநியோகிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப் 6 வடமாகாணத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட நகைகளில் மற்றுமொரு பகுதி- சுமார் மூவாயிரம் தொகுதி நகைகள்-இந்த வாரம் கொழும்பிலிருந்து இங்கு அனுப்பி வைக்கப்பட இருக்கின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பெரும்பாலான நகைகளே இந்த வாரம் கொண்டுவரப்பட உள்ளன.

இந்த வாரத்திலேயே இந்த நகைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய தலைமை அலுவலகம் மேற்கொண்டு வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மக்களின் நகைகளை கிளிநொச்சி தபால் நிலையக் கட்டடத்தில் வைத்து வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இதற்கென சம்பந்தப்பட்ட கட்டடத்தில் தனியான பிரிவு ஒன்றை மக்கள் வங்கி அமைத்திருக்கிறது

முல்லைத்தீவு மாவட்ட மக்களின் நகைகள் மாங்குளம் மக்கள் வங்கிக் கிளையில் வைத்து வழங்கப்படும்.

இந்த மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் அடகு நகைகள் முதற்தடவையாக வழங்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது

வடமாகாணத்தில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்ட எஞ்சிய நகைகளும் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்படுவதற்கு தயார் நிலையில் இருப்பதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்வரும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சகல நகைகளையும் திருப்பி வழங்குவதற்கு மக்கள் வங்கி ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

இதனையடுத்து திட்டமிட்டபடி எதிர் வரும் தமிழ்ப் புத்தாண்டு முதல் மீளவும் நகை அடகு பிடிக்கும் வேலைகளை மக்கள் வங்கி யாழ். நகரில் ஆரம்பிக்கவிருக்கிறது.

முதலில் யாழ். நகரில் மக்கள் வங்கியின் ஒரு கிளையில் மாத்திரம் அடகு பிடிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படும். நாளடைவில் அது விஸ்தரிக்கப்படும்.

அடகு நகைகளை யாழ்ப்பாணத்திலேயே வைத்திருப்பதற்கான விசேட பாதுகாப்பு முன்னேற்பாடுகள் குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகிறது. (ஒ-ஐ)

### இன்று மாமாங்கத் தீர்த்தோற்சவம்

பருத்தித்துறை பெப் 6. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மாமாங்கத் தீர்த்தோற்சவம் இன்று நடைபெறவுள்ளது.

அறுபது வருடத்திற்கு ஒரு முறை வரும் மாமாங்க வருட தீர்த்தோற்சவம் இன்று அதிகாலை 5.30 மணிக்கு கற்கோவளம் கடற்கரையில் நடைபெறும். (ஒ-118)

★ ★ ★

யாழ்ப்பாணம் பெப் 6. தெல்லிப்பளை, பன்னாலையில் உள்ள திரிஷிஈஸ்வரம் பாலசுப்பிரமணியர் கோயில் தீர்த்த உற்சவம் இன்று திங்கட்கிழமை நடைபெறும். (க)

### யாழ். இந்துக் கல்லூரி

### பழைய மாணவர் சங்கம்

ஞானவைரவ கோயில்
கட்டட நிதிக்கான

### அதிஷ்ட லாபச் சீட்டு

5-2-1989இல் நடைபெற இருந்த சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களினால் பின் போடப்பட்டுள்ளது. சீட்டிழுப்பிற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

செயலாளர்
(C/1174) யா. இ. க, ப. மா. ச.

## மரண அறிவித்தல்

### பொன்னையா கனகசபை

சரசாலையைச் சேர்ந்த பொன்னையா கனகசபை ஒய்வுபெற்ற தலைமை ஆசிரியர்) சிவபதம் அடைந்துவிட்டார். இவர் செல்வநாயகி அவர்களின் அன்புக் கணவரும் ஸ்ரீகாந்தன் (ஆசிரியர் கொக்குவில் இந்துக் கல்லூரி) பரிமளகாந்தன், Dr தேவகாந்தன் (வைத்திய நிபுணர், U S A) பத்மகாந்தன் (கணக்காளர் பப்புநியூகினியா) Dr. சிவகாமசுந்தரி (U K) பத்மாசனி (U. S. A) Dr சோதிநாயகி (சம்பியா) சாந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜலட்சுமி, கமலாதேவி, தனலட்சுமி, இந்திராதேவி, Dr. சிவசுப்பிரமணியம், பாலசுப்பிரமணியம், Dr. யோகேஸ்வரன், குலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அற்புதம் விநாயகமூர்த்தி (U. K) கணேசலிங்கம் (அவுஸ்திரேலியா), திலகராசா (உலகவங்கி), கமலேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

ஈமைக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் 6-2-89 திங்கள் காலை 10 00 மணிக்கு நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்கின்றோம்.

(9354) தகவல்:
குடும்பத்தினர்.

### புத்தூரில் ஒருவர் சுட்டுக்கொலை

புத்தூர் வைத்தியசாலைக்கு அருகில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் நபர் ஒருவர் சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டார்.

60வயது மதிக்கத்தக்க பாலன் என அழைக்கப்படுபவரே சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தை அடுத்து புத்தூரில் நேற்றுக் கடைகள் மூடப்பட்டிருந்தன (உ-10-72)

### புங்குடுதீவில் ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பெறும் கூட்டத்தில் பங்கு பற்றிய பின்னர் மாலையில் திருகோணமலை, சேருவில, கெக்கிராவ பகுதிகளில் நடைபெறும் கூட்டங்களில் ஜனாதிபதி உரையாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-10)

### கூட்டத்தில்....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்தனர்.

உயிரிழந்தவர்கள் ஒரு பெண்ணும் குழந்தையும் ஆவர்.

திருமதி பண்டாரநாயக்காவின் மெய்ப்பாதுகாவலர்களில் மூவர் காயமடைந்தனர்.

தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து கூட்டம் கலைந்தது.

அதன்பின்னர் திருமதி பண்டாரநாயக்கா அனுராதபுரம் அழைத்துச் செல்லப்பட்டார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது, 1988 டிசம்பர் 16 ஆம் திகதியும் பிரசாரக் கூட்டம் ஒன்றில் திருமதி பண்டாரநாயக்கா மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

வீடமைப்புக் கடனுக

## 5 வருட சம்பள முற்பணம் கேட்கிறார்கள் டாக்டர்கள்

கொழும்பு பெப் 6 வீடமைப்புக் கடனுக ஐந்து வருடச் சம்பளத்தை முற்பணமாக வழங்கும்படி கோரி அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பியுள்ளது.

குறைந்த வட்டியில் இச் சம்பள முற்பணக் கடன் வழங்கப்படவேண்டும் என்றும் சங்கம் கேட்டுள்ளது.

இக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டால் குறைந்தது 2½ லட்சம் ரூபாவில் இருந்து ஆகக்கூடியது 6 லட்சம் ரூபா வரை டாக்டர் ஒருவர் பெறமுடியும்.

இந்த நடவடிக்கையில் சுமார் 2 ஆயிரத்து 500 டாக்டர்கள் பயனடைவர். (ஒ-எ)

## ஊழியர் சேமலாபநிதி;

### வயது உச்சவரம்பு நீக்கம்

கொழும்பு. பெப் 6 ஊழியர் சேமலாப நிதியில் அங்கத்துவம் பெறுவதற்கான வயது உச்சவரம்பு நீக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக திருத்தம் ஒன்றுக்கு அரசின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

தற்பொழுது நடைமுறையில் உள்ள ஊழியர் சேமலாப நிதிக்கட்டளைகள் சட்டத்தின்படி 55 வயதை அடைந்த ஆண்களும் 50 வயதை அடைந்த பெண்களும் புதிதாக அங்கத்துவம் பெறமுடியாது.

புதிய திருத்தத்தின்படி இவ்வயதைத் தாண்டியவர்களும் அங்கத்தவர்களாக முடியும். (ஒ-எ)

### மெண்டிஸுக்கு பாஸ்போட்

கொழும்பு, பெப். 6 பிரிட்டனில் இருந்து நாடு கடத்தப்பட்ட விராஜ் மெண்டிஸுக்கு இலங்கை பாஸ்போட் வழங்கப்பட்டிருக்கிறது

கொழும்பு வந்து சேர்ந்த பின்னர் விராஜ் மெண்டிஸ் இலங்கை பாஸ்போர்ட் கோரி விண்ணப்பித்திருந்தார் என்பது தெரிந்ததே. (உ-எ)

### பாகிஸ்தானின் ஏவுகணைகள்

இஸ்லாமாபாத், பெப் 6 தான் தயாரித்த இரண்டுரக சாம்ஏவுகணைகள் வெற்றிகரமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டதாக பாகிஸ்தான் நேற்று அறிவித்தது.

ஒரு ரக ஏவுகணை 80 கிலோ மீற்றர் தூரத்துக்கு தரையில் இருந்து வானுக்குச் செல்லக்கூடியது.

மற்ற ரகம் 300 மீற்றர் செல்லக்கூடியது என்று பாகிஸ்தான் அரசு மேலும் அறிவித்தது. (ஒ-எ)

கிளிநொச்சியில்

# விவசாயபீட கட்டட வேலை விரைவில் ஆரம்பிக்க முயற்சி

கிளிநொச்சியில் அமையவிருக்கும் பல்கலைக்கழக விவசாய பீடத்துக்கான காணி சிங்கள மகாவித்தியாலயத்துக்குச் சமீபமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்றவாரம் இதற்கான பெயர்ப்பலகை ஒன்று வைக்கப்பட்டது.

இக் காணியில் வெகு விரைவில் கட்டடங்கள் அமைய இருக்கின்றன.

ஆனால் ஒதுக்கப்பட்ட இக் காணியில் பல வருடகாலமாக மக்கள் குடியேறி வசித்து வருகிறார்கள்.

இக் காணியில் குடியேறிய மக்களை வெளியேற்றுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக அறியவருகிறது (ச- 163)

## சோவியத் அமைச்சர் பாகிஸ்தானில் பேச்சு

இஸ்லாமபாத், பெப்.5 சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெர்வான்ட்ஸே இஸ்லாமபாத்தில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் யாகுப்கானுடன் பேச்சுக்களை ஆரம்பித்தார்.

ஆப்கன் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண கெரில்லாக் குழுக்கள் மீதுசெல்வாக்கைப்பயன்படுத்தும்படி பாகிஸ்தானை சோவியத் அமைச்சர் அப்போது கேட்டுக்கொண்டார்.

கடந்த 30 ஆண்டுகளில் சோவியத் வெளியுறவு அமைச்சர் ஒருவர் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்தது இதுவே முதல் தடவை என்று சொல்லப்படுகிறது. (எ)

### ஆஸ்பத்திரியில் சடலம்

யாழ்ப்பாணம் பெப் 6. சூட்டுக்காயங்களுடன் உரும்பராயில் கிடந்ததாகக் கூறப்படும் நவரட்ணம் இந்திரராசா (வயது 37) என்பவரின் சடலம் யாழ் ஆஸ்பத்திரியில் இந்திய அமைதிப்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவர் வயாவிளானைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ10)

### கல்முனையில் நடமாடும் செயலகம்

கொழும்பு, பெப். 6 ஜனாதிபதியின் நடமாடும் செயலகம் கல்முனையிலேயே முதலில் இயங்க ஆரம்பிக்கும்.

இதை ஜனாதிபதி பிரேமதாஸாவே அறிவித்தார்.

கல்முனையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இதனை வெளியிட்டார் (ஒ-எ)

## இஸ்ரவேல் அரசின் புதியயோசனை பலஸ்தீனிய இயக்கம் நிராகரிப்பு

அம்மான், பெப் 5 மத்திய கிழக்குப் பிரச்சினைக்கு இஸ்ரவேல் அரசு சமர்ப்பித்த புதிய யோசனையை பலஸ்தீன விடுதலை இயக்கம் நிராகரித்துவிட்டது.

அரபுப் பிரதேசங்களைத் தொடர்ந்து ஆக்கிரமித்துக் கொள்ளவே புதிய யோசனை இஸ்ரவேலுக்கு உதவும் என்று பலஸ்தீன விடுதலை இயக்கம் காரணம் காட்டியுள்ளது. (அ-எ)

இஸ்ரவேல் பிரதமர் ஷாமிர் தனது புதிய யோசனையில்,

'பலஸ்தீன விடுதலை இயக்கம் சுயாட்சித் திட்டத்தை இடைக்காலத் தீர்வாக ஏற்றுக்கொண்டால் காஸா மற்றும்மேற்குக் கரைப் பிரதேசங்களில் உள்ள நகரப்புறங்களில் இருந்து இஸ்ரவேலிய இராணுவம் வாபஸ் வாங்கப்படும்'' என்று அறிவித்துள்ளார். (எ)

### ரமணி தலைவர்

சென்னை, பெப் 6. தமிழ்நாடு சட்டசபையில் உள்ள மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சி எம். எல். ஏக்கள் நேற்றுக் கூடி திரு கே. ரமணியை சட்டசபைக்கு தலைவராகத் தெரிவு செய்தனர். (ஒ-எ)

### மதுரையிலும் நீலகிரியிலும் நால்வர் பலி!

சென்னை, பெப் 6 மதுரையில் பேக்கரி ஒன்று இடிந்து விழுந்ததில் அதன் உரிமையாளரும் அவரின் புதல்வனும் உயிரிழந்தனர்.

நீலகிரி மாவட்டத்தில் கூடலூர் என்னுமிடத்தில் குடிசை ஒன்று எரிந்ததில் இரு குழந்தைகள் தீயில் கருகி மாண்டனர். (ஒ-எ)

### 12 ஐ.தே.க. ஆதரவாளர் சுட்டுக் கொலை

கொழும்பு, பெப் 6 கடந்த சனிக்கிழமை மட்டும் ஜே. வி. பி. தீவிரவாதிகளால் பனுகொட, பண்டாரவளை, பெந்தோட்டை, வெலகெதர, வத்தேகம, ஆகிய இடங்களில் 12 ஆளுங்கட்சி ஆதரவாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. (ஒ-எ)

### பாம்பு தீண்டி மரணம்

நெடுங்கேணி பெப் .6 நெடுங்கேணியைச் சேர்ந்த குருசாமி உதயசங்கர் என்ற ஐந்து வயதுப் பாலகன் தாய் தந்தையருடன் நித்திரையில் இருந்த போது பாம்பு தீண்டி மரணமானார். (க-108)

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### தேவராணி முருகதாஸ் (பேபி)

1989-02-05 ஞாயிறு அன்று மதியம் பத்தமேனி வழியாகப் பிரயாணம் மேற்கொண்டிருந்தபோது ஏற்பட்ட அசம்பாவிதத்தால் திருமதி தேவராணி முருகதாஸ் (பேபி) [தட்டெழுத்தாளர், ஆய்வு நிறுவனம் கொக்குவில்] அவர்கள் அகால மரணமானார்.

இவர் ஆய்வு நிறுவனத்தின் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சி. முருகதாஸ் (ரவி) அவர்களின் அன்பு மனைவியும், மயிலணியைச் சேர்ந்த திரு. ச. ஆறுமுகம், பரஞ்சோதி, தம்பதிகளின் அன்புப் புதல்வியும். திருமதி புவனராணி, சிறீதரன், திருமதி ஜோதிராணி தர்மலிங்கம், திரு. ஆ. சொர்ணலிங்கம், (தேசிய இளைஞர் சேவை மன்றம்), திரு ஆ. பரமேஸ்வரன் (பொறியியலாளர் மகாவலி), திரு ஆ. சுதந்திரராஜன் (பொறியியல்துறை மாணவன், பேராதனைப் பல்கலைக்கழகம்), செல்வி ஆ. ஜீவராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வசாவிளானைச் சேர்ந்த திருமதி சிவகுரு - அன்னப்பிள்ளை அவர்களின் அன்பு இளைய மருமகளும், திரு. சி. மோகனதாஸ் அவர்களின் அன்பு மைத்துனியுமாவார்.

இறுதி நிகழ்வுகள் மயிலணியில் இடம் பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
திரு. சி. முருகதாஸ்.
(9478)

### தாமோதரம்பிள்ளை சங்கரப்பிள்ளை

(சட்டத்தரணி)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 202, நாவலர் வீதி யாழ்ப்பாணத்தில் வசிப்பவருமாகிய சட்டத்தரணி திரு தாமோதரம்பிள்ளை சங்கரப்பிள்ளை 5-2-1989 அன்று காலமானார். அன்னார் சிவானந்தவல்லியம்மாவின் அன்புக் கணவரும், ஆனந்தசிவகுமார் (U.K), ஜெயக்குமார் (USA) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். உற்றார், உறவினர் நண்பர்கள், அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

ஈமைக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
திருமதி சி. சங்கரப்பிள்ளை.
(9479)

### திரு. வைத்திலிங்கம் வல்லிபுரம்

உயர்திரு. வைத்திலிங்கம் வல்லிபுரம் அவர்கள் 4-2-1989 சனிக்கிழமையன்று சிவபதமடைந்து விட்டார். இவர் மனோரஞ்சிதத்தின் அன்புக்கணவரும், நாகேஸ்வரன், பரமேஸ்வரன், புனிதவதியின் அன்புத் தந்தையும், விமலாதேவி, தனலச்சுமி, ஸ்ரீரஞ்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 5-2-89 [ஞாயிற்றுக்கிழமை] அவருடைய இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கொக்குவில் மயானத்தில் தகனக்கிரியை நடைபெற்றதை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
ஜி. ஸ்ரீரஞ்சன்
3 ஆம் கட்டை,
கொக்குவில். [9470]

### திருமதி வர்ணமணி நாகலிங்கம்

அளவெட்டி வடக்கு காளியவத்தையை காலஞ்சென்ற அம்பலவாணர் நாகலிங்கத்தின் அருமை மனைவி வர்ணமணி அவர்கள் 5 2 89 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார். இவர் நா. சண்முகராசா (R M P மத்திய மருந்தகம், ஆனையிறவு) இராஜேஸ்வரி, இரட்னேஸ்வரி, (ஆசிரியை அருணாசல வித்தியாசாலை அளவெட்டி) புவனேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு வ தம்பிப்பிள்ளை (பிரசித்த நொத்தாரிஸ் அளவெட்டி) திரு. க சுப்பிரமணியம் (இளைப்பாறிய உப-அதிபர் அருணோதயக் கல்லூரி, அளவெட்டி) திரு. இ நடராத்தினம் (A G A செட்டிகுளம்) திரு. ச. சிறிஸ்கந்தராசா (உரிமையாளர் திருமால் அச்சகம், யாழ்ப்பாணம்) திருமதி ச. சரோஜினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 6-2-89 திங்கட்கிழமை பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

நா. சண்முகராசா
(மகன்)
காளியவத்தை,
அளவெட்டி.
தகவல் தந்தவர்: த. அகிலதாசன் (9481)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 06 - 02 - 1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt.) Ltd. 292/2 Navalar Road, Jaffna, Monday 06th February 1989.